பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.




**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-வரு மாசி-மீ உச-வ (7—3—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் சஅ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி கினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் சகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி கினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக கினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்

S. இராமநாதன்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் சகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி கினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக கினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கை நூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

S இராமநாதன் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

# செய்தித் திரட்டு.

மகாத்மா காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்திலேயே 'இளைப்பாறிக்கொண்டிருக்கின்றனர். இவரை, அமெரிக்காவிலுள்ள இந்தியக் கிறிஸ்துவரொருவர் ஏசுநாதரின் உபதேசங்களைப்பற்றித் தங்கள் கருத்தென்ன வென்று கேட்டார். அதற்கு மகாத்மா, ஏசுநாதரின் உபதேசங்கள் சன்மார்க்கத்தைப் பெரிதும் வளர்க்கக் கூடியதென்றும், ஆனால் பைபிளில் கூறப்பட்டுள்ளவை யாவும் கடவுளின் முடிவான வார்த்தையென ஒப்புக்கொள்ள முடியாதென்றும், மக்களை உய்விக்க வந்த மகான்களில் ஏசுநாதரும் ஒருவரே தவிர, அவர் கடவுள் புத்ரர் என்பதைத் தாம் ஒப்புக்கொள்வதில்லையென்றும், பைபிளின் வாசகத்தை விடக்கருத்துக்களைத்தாம் போற்றுவதாகவும் கூறியுள்ளார்.

* * *

சென்ற வாரத்தில் திருச்சி ஜங்ஷனில் இரண்டு வண்டித்தொடர்கள் மோதிக்கொண்டதால் சுமார் பத்துப்பேர் காயமடைந்தனர். அந்த வண்டியில் பெரும்பாலும் குமஸ்தாக்களே யிருந்தார்கள்.

* * *

'பம்பாய் குரானிகில்' பத்திரிகையின் ஆசிரியர் மிஸ்டர் பி. ஜி. ஹார்னிமெனுக்கும், டைரெக்டர்களுக்கும் அபிப்ராய பேதமேற்பட்ட படியால், மிஸ்டர் ஹார்னிமன் 'குரானிகில்' ஆசிரியர் பதவியை இராஜிநாமாச்செய்து விட்டார்.

* * *

அஸ்ஸாம் கவர்னராகிய ஸர். ஸான்ஸ்கர் டூரா என்றவிடத்திற்குப் போகையில் ஜெமீந்தார் கச்சேரி யருகே செல்லநேர்ந்தது. அங்கு கூடியிருந்த கூட்டத்திலிருந்து ஒரு முகமதிய டப்த்ரி திடீரென்று முன்வந்து கவர்னரோடு கைகுலுக்கி விட்டுக் கூட்டத்தில் புகுந்து கொண்டாராம். கவர்னர் போனபிறகு, அந்த டப்த்ரி கைதுசெய்யப்பட்டு உள்ளூர் ஆஸ்பத்திரிக்கு 10 ரூ கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தப் பட்டார் என்று "குரானிகில்" பத்திரிக்கையில் ஒரு செய்தி காணப்படுகிறது,

* * *

இம் மாதம் 10-ந் தேதியன்று கோயமுத்தூர் ஜில்லா போர்டு மீட்டிங்கு கோபி செட்டிபாளையத்தில் நடை பெறுமென்று தெரிகிறது.

* * *

மகாத்மா காந்தியின் "யங்இந்தியா" பத்திரிக்கையில் பின் வரும் விபரம் வெளியாகியிருக்கிறது. 1925-ம் வருடத்திய கடைசி மாதத்தில் தமிழ் நாட்டில் 25160 ரூபாய் மதிப்புள்ள கதர் உற்பத்தியாயிருக்கிறது; விற்பனையின் மதிப்பு 285120 ரூ ஆந்தராவில் உற்பத்தி 5658 ரூ; விற்பனை 89047ரூ; கூர்ஜரத்தில் உற்பத்தி 31507ரூ; விற்பனை 23036 ரூ; வங்காளத்தில் உற்பத்தி 110764 ரூ; விற்பனை 73006 ரூ; பம்பாயில் விற்பனை மட்டும் 379329 ரூ; பர்மாவில் விற்பனை 6003 ரூ; மொத்தம் எல்லா மாகாணங்களிலும் உற்பத்தி மதிப்பு 543951 ரூ; விற்பனை 744959 ரூ.

சேலம் டவுனுக்குத் தண்ணீர் சப்ளை செய்யும் பனமரத்துப் பட்டி ஏரியில் தண்ணீர் மிகவும் குறைந்து போய் விட்டபடியால், சேலத்தில் ஜலக்கஷ்டம் அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது. குழாய்களில மிகவும் கொஞ்சம் தண்ணீர் சுமார் ஒரு மணி நேரத்திற்குச் சப்ளையாகிறதாம். அந்நகரிலுள்ள பொதுக்கிணறுகளைச் சீர்படுத்தவும், தேவையான கைப்பிடி சுவர், ராட்டினம் முதலியவைகளை போடவும் ரூ 6000 முனிசிபாலிட்டியார் சாங்ஷன் செய்திருக்கின்றனர்.

* * *

திண்டுக்கல்—பொள்ளாச்சி இருப்புப் பாதை வேலை அதிதீவிரமாக நடைபெறுகிறது.

* * *

சில காலங்களுக்கு முன் பம்பாயில் நடை பெற்ற பாவ்லா கொலை, மும்டாஜ்பேகம் என்னும் பெண்ணை பலவந்தமாக எடுத்துச் செல்ல முயற்சி முதலிய வைகளில், இந்தூர் மகாராஜாவுக்கு சம்பந்தம் உண்டா, இல்லையா வென்பதை விஜாரிக்க இந்தியா கவர்ன்மெண்டார் ஓர் கமிஷனை நியமிக்க உத்தேசங்கொண்டிருந்தனர். இது விபரம் மகாராஜாவுக்கு அறிவிக்கப்பட்ட தன்மேல், தாம் இக்கமிஷன் விசாரணைக்கு உட்படத் தயாராயில்லை யென்று கூறி அரசபட்டத்தை விட்டு விலகிக்கொண்டார். அவருடைய குமாரர் பட்டத்துக்கு வரும் வரை சமஸ்தானம் ஓர் பஞ்சாயத்து சபையால் ஆளப்படும்.

* * *

பம்பாய் மாகாணம் காண்டேஷ் என்ற ஊரைச்சேர்ந்த ஸ்ரீமான்கள். வி. சி. ஜவதேகர், என். எஸ். தேவர் என்ற இரண்டு பிளீடர்கள் ஒரு வழக்கில் ஆஜரானார்கள். இதற்கு ஒரு தொகை பீசாகப் பேசப்பட்டிருந்தது. வழக்கை ஜெயித்துக்கொடுத்தால், இந்தப் பீசைவிட அதிக சன்மானம் கொடுப்பதாகக் கட்சிக்காரர்கள், வக்கீல்களுக்கு எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தனர். கேஸ் ஜெயித்து விட்டது ஆனால் கட்சிக்காரர்கள் எழுதிக்கொடுத்தபடி நடக்க மறுத்து விட்டார்கள். உடனே வக்கீல்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். கீழ்க்கோர்ட்டில் டிக்ரி செய்யப்பட்டது. ஆனால் பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு வர, கீழ்க் கோர்ட்டு டிக்ரி உத்தரவை ரத்துசெய்ததைத் தவிர, வக்கீல்கள் தங்கள் தொழில் முறைக்கு விரோதமாக நடந்து கொண்டதற்காக எச்சரிக்கையும் செய்யப்பட்டனர்.

* * *

சென்ற மாதம் 27-ந்தேதி சனிக்கிழமையன்று முசிரிக்கு மேல் புறம் மாஞ்சோலையில், 24 மனைதேசாதிபதி தெலுங்கு செட்டியார்களின் (கொல்லா நோன்புடன்) தேவி தேவி திருவிழா நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டியவரான ஸ்ரீமான். முத்துக்கருப்பன் செட்டியாரவர்கள் பல அசந்தர்ப்பங்களினால், கூட்டத்திற்கு வரக்கூடாமைக்கு வருந்தியும்,விழாச் சிறப்பு நன்கு நிறைவேருமாறு ஆசி கூறியும் தந்திச் செய்தி அனுப்பி இருந்தார். பூசையும், போஜனமும் நிறைவேறிய பிறகு, உயர்தரக்கலா சாலைத் தமிழாசிரியர் ஸ்ரீமான். சுவாமிநாத தேசிகர வர்களின் தலைமையில், ஸ்ரீமான்கள். சொக்கலிங்கம் செட்டியார், நீலமேகம், மாணிக்கம் முதலியவர்கள் அரிய சொற்பொழிவுகள் செய்தனர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது என ஒரு நிரூபர் எழுதுகிறார்.

* * *

பெருந்துறைக்குப் பக்கத்தில் ஒரு தென்னந்தோப்பில் தினமும் கள்ளுத் திருட்டுப் போய்க் கொண்டிருந்ததாகவும், அதற்காக அம்மரத்துச் சொந்தக்காரர், குடிகாரத்திருடனைக் கண்டு பிடிக்க, அம்மரத்தில் கட்டியிருந்த கள்ளுமுட்டிகளில், ஊமத்தை இலை ரசத்தை பிழிந்து வைத்திருந்தார். அத்தோட்டக்காரனுடைய மக்களே அன்றையத்தினம் இரவு தகப்பனுக்குத் தெரியாமல் கள்ளை இறக்கி அறியாமற் குடித்து விட்டதினால், இருவரும் இறந்து போய்விட்டார்கள்.

---

## தேசபக்த சமாஜம்,

நாகபட்டணம்.

மாயவரம், தஞ்சை ஜில்லா தென்னாப்ரிக்கா இந்தியப் பிரயாணிகள் சங்கம் காரியதரிசியின் கடிதப்படியும், சென்னையிலிருந்து ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவகளிடமிருந்து தந்தி கிடைத்தபடியாலும் நம் சமாஜ ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை நாளது மார்ச்சு-மீ 13, 14-உ களுக்கு ஒத்திவைத்துக் கொண்டோம். ஷை விழா நாளது மார்ச்சு 13, 14 உ களில் நடைபெறுமென தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நா. வ. கிருஷ்ணசாமி

காரியதரிசி

---

## சுகோதயம்.

ஆரணியில் நடைபெற்று வந்த "சுகோதயம் என்னும் பத்திரிக்கை தாத் காலீகமாக நிறுத்தப்பட்டிருப்பதாய் அறிகிறோம். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். "சுகோதயம் பத்திரிக்கையானது, அது ஏற்பட்ட கால முதல் கூடுமானவரை மகாத்மாவின் வழி பற்றி நின்றதோடு (வகுப்பு விஷயங்களைத்தவிர அதுவும் இரண்டொரு சந்தர்ப்பங்கள் மாத்திரம் ]மற்றக் காலமெல்லாம் உண்மையுடனும், உறுதியுடனும் வெளிப்பட்டு வந்துகொண்டிருந்தது. அப்பேர்ப்பட்ட பத்திரிக்கை ஒரு சிறு அவதூறுக் கேசுக்குக்கூட தாங்கமாட்டாமல், கஷ்டப்பட்டதின் பலனாய் ஸ்தம்பித்துப்போனதைப் பார்க்க மிகவும் வருந்துகிறோம். பத்திரிக்கை விஷயத்தில்நமது நாட்டு ஜனங்களின் ஆதரவு எப்படியிருக்கிறதென்பது இதிலிருந்து விளங்குகின்றது.

## தமிழிற்குத் துரோகமும், ஹிந்தி பாஷையின் இரகசியமும்.

(சித்திரபுத்திரன் எழுதுவது).

நமது நாட்டின் க்ஷேமத்திற்காக என்று எந்தக்காரியம் ஆரம்பிக்கப்பட்டாலும், அவற்றை நம் நாட்டுப் பிராமணர்கள் கைப்பற்றிக்கொண்டு அதனால் தாங்கள் பிழைக்கும்படியாகவும், நமக்கு பெரிய ஆபத்து விளையும்படியாகவே செய்து விடுகிறார்கள். எது போலவென்றால்; நமது சர்க்கார் நமக்குச் சுயராஜ்யம் கொடுப்பதாய்ச் சொல்லி முதல்தடவை, இரண்டாந்தடவையாகக் கொடுக்கப்பட்டு வந்த சீர் திருத்தங்கள் என்பது, நமது நாட்டுக்கு அதிக வரி போடவும், ஜாதிச்சண்டைகளும், பொறாமையும் மேலிட்டு ஒருவரையொருவர் ஏமாற்றுவதன் மூலம் ஒற்றுமைக்குறைவு ஏற்படவும், கைத்தொழில்கள் அற்றுப்போய் நாளுக்கு நாள் மனச்சாக்ஷியையும், கற்பையும் விற்று ஜீவிக்கும்படி ஏழைகள் அதிகமாகவும், அரசாங்கத்தார் உத்தேசம் நிறைவேறத்தக்கவண்ணம் நமது நாட்டுப்பணம் கொள்ளைபோகவும், உபயோகப்படுவது போலவும், நமது மக்கள் படிக்கவேண்டும் என்கிற எண்ணத்தின் பேரில் சர்க்காரை பள்ளிக்கூடம் வைக்கும்படி நாம் கேட்டுக்கொள்வதனால், அந்தப் படிப்பு நம் நாட்டுக்குத் துரோகம் செய்யத்தக்க அளவுக்குச் சர்க்கார் ஆக்ஷிக்கு அநுகூலமாயிருப்பதுபோலவும் ஆய்விடுகிறது. அதுபோலவே நமது தமிழ் நாட்டில் ஹிந்தி பிரசாரமும் பெரும்பாலும் பிராமணர்களுக்கே அநுகூலத்திற்காக செய்யப்பட்டிருக்கிறது.

மகாத்மா காந்தி அவர்கள் ராஜீய நோக்கத்தை முன்னிட்டு இந்தியா முழுதுக்கும் ஒரே பாஷையாயிருக்கவேண்டும் என்கிற கருத்துக்கொண்டு ஹிந்தி பாஷைக்காகப் பொது மக்கள் பணத்தைச் செலவு செய்தும், பொது ஜனங்களும் மகாத்மா சொல்லுகின்றாரே யென்கிற பக்தியின் பேரிலும் நம்பி, அதை அமுலுக்குக்கொண்டுவந்ததின் பலன், அதுவும் ஒரு வினையாய் முடிந்து வருகிறது.

இதுவரை ஹிந்திக்காகச் செலவாயிருக்கும் பணத்தில் பெரும்பாகம் பிராமணரல்லாதாருடையது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. ஹிந்தி படித்தவர்களில் 100-க்கு 97 பேர் பிராமணர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் நாட்டின் மொத்தத்தொகையில் 100-க்கு 97 பேர் பிராமணரல்லாதாராயிருந்தும், 100-க்கு மூன்று வீதம் உள்ள பிராமணர்கள் தான் ஹிந்தி படித்தவர்களில், 100-க்கு 97 பேர்களாயிருக்கின்றனர். பிராமணரல்லாதார் 100-க்கு 3 பேராவது ஹிந்தி படித்திருப்பார்களோவென்பது சந்தேகம். இந்தப் படிப்பின் எண்ணிக்கை எப்படி இருந்தாலும், நமக்கு அதைப்பற்றி அதிகக்கவலை ஒன்றுமில்லை. ஆனால் இதில் 100-ல் ஒரு பங்கு கவலைகூட தமிழ் பாஷைக்கு எடுத்துக் கொள்ளுவதில்லை என்பதையும், ஹிந்தி படித்த பிராமணர்களால் நமக்கு ஏற்படும் கெடுதியையும் நினைக்கும்போது, இதைப்பற்றி வருந்தாமலும், இம்மாதிரி பலன் தரத்தக்க ஹிந்திக்கு நாம் பாடுபட்ட முட்டாள்தனத்திற்கும்; நாம் பணம் கொடுத்த பைத்தியக்காரத்தனத்திற்கும் வெட்கப்படாமலுமிருக்க முடியவில்லை. இந்த ஹிந்தி பாஷையானது, நம் பணத்தில்—நமது பிரயத்தனத்தில்—நமது நாட்டில் பல பிராமணர்கள் படித்து வெளி மாகாணங்களுக்குப் போய், ஆங்காங்கு நமக்கு விரோதமாய் பிரசாரம் செய்வதும், நம்மை சூத்திரர்கள், புத்தியில்லாதவர்கள், முட்டாள்கள் என்றும், தென்னாட்டுப் பிராமணரல்லாதாருக்கு மூளை இல்லை என்றும் சொல்லுவதும், வெளிமாகாணங்களிலுள்ள வர்த்தமான பத்திரிக்கைகளில் போய் அமர்ந்துகொண்டு பிராமணாதிக்கத்தை தேசமெல்லாம் நிலைநிறுத்தவும், பிராமணரல்லாதாரை அழுத்தப் பிரசாரம் செய்யவும், வெளிமாகாண காங்கிரஸ் முதலிய பொது ஸ்தாபனங்களிலும் இவர்களே தலைவர்களாகவும், அவற்றில் மாதம் 100. 200, 300 வீதம் சம்பளம் பெற்றுப் பிழைப்பதுமான காரியத்திற்கல்லாமல், வேறு வழியில் நமக்கு ஒரு பலனையும் அளிப்பதில்லை. இவ்விஷயத்தைப் பற்றி முன் ஒரு சமயம், ஹிந்தி பிரசாரத்திற்காக, நம்மிடம் பணம் பறிக்க, நமது பிராமணர்களால், வெளிமாகாணத்திலிருந்து தருவிக்கப்பட்ட ஸ்ரீமான். புருஷோத்தம தாஸ் தாண்டன் என்பவரை நேரில் கண்டு, இவ்விஷயத்தை அவரிடம் ஒருவர் தெரிவித்ததில்—அதாவது, பணம் மாத்திரம் பிராமணரல்லாதாரிடம் வசூல் செய்கிறீர்களே; இது வரையில் ஹிந்தி படித்த பிள்ளைகள் எல்லாம் 100-க்கு 95 பிராமணப்பிள்ளைகளாகவே தான் படித்திருக்கின்றன; அதன் உபாத்தியாயர்களும் 100-க்கு 97 பேர் பிராமணர்களாகவே தான் இருக்கிறார்கள்; இதன் காரணமென்ன? சில பிராமணரல்லாத வாலிபர்கள் உபாத்தியாயர்களாகப் பயிற்சி பெற இடப்பட்டு வந்தவர்களையும், சரியாய் நடத்தாமல் வெளியேறப்பட்டதாகவும், என்னிடம் புகார்கள் வந்துகொண்டிருக்க, இந்நிலையில் இதற்காக பிராமணரல்லாதாரை ஹிந்திக்குப் பணம் கேட்பது சரியாயென்று சொன்னதற்கு, இவ்வளவையும் கேட்டுக்கொண்டு, எல்லாவற்றையும் விசாரித்துத் தெரியப்படுத்துவதாய்ச்சொல்லிப்போனவர் இதுவரை ஒரு சங்கதியும் தெரிவிக்கவில்லை. அல்லாமலும் முன்போலவே காரியங்கள் மாத்திரம் நடந்துவருகின்றது. இதே மாதிரி நமது நாட்டுப்பிராமணர்கள், இந்நாட்டாரைத் தங்களால் ஏய்க்க முடியாது என்று தெரிகிற சமயத்தில், வெளிமாகாணத்தில் இருந்து ஒருவரைக் கூட்டி வந்து ஏமாற்றி தங்கள் காரியத்தைச்சாதித்துக் கொள்வது வழக்கமாக இருந்து வருகிறது.

உதாரணமாக, சுயராஜ்யக்கக்ஷி என்கிற பிராமணக்கட்சிக்கு நமது நாட்டில் யோக்கியதை இல்லாத காலத்தில்; ஸ்ரீமான் தேசபந்து தாஸைக்கூட்டி வந்து செல்வாக்குச் சம்பாதித்துக்கொண்டார்கள். இந்து மகா சபை என்கிற பிராமண வர்ணாசிரம தர்ம சபைக்கு நமது நாட்டில் யோக்யதை சம்பாதிக்க, ஸ்ரீமான் லாலா லஜபதிராயைக்கூட்டி வந்து ஏமாற்றினார்கள். காக்கிநாடா காங்கிரசில் சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவு கொடுத்ததால் தனக்குக் கொஞ்சம் செல்வாக்குக் குறைந்துபோய் விட்டதெனப் பயந்த பிராமணர் ஒருவர், ஸ்ரீமான்கள் பஜாஜையும் பாங்கரையும் தருவித்து, ஊர் ஊராய்த்திரிந்து, உபசாரப் பத்திரம் பெற்று, ஜனங்களை ஏமாற்றி யோக்கியதையை நிலைநிறுத்தினார். இனி மகாத்மாவையும் கூட்டி வந்து ஏமாற்றப் போகிறார். இம்மாதிரியாகவே இது சமயமும் ஹிந்தியைப் பொது பாஷை ஆக்கவேண்டும் என்கிற கவலையுள்ளவர்கள் போல், தேசத்தின் பேரால் ஆங்காங்கு பல பிராமணர்கள் பேசுவதும், அதைச்சர்க்கார் பள்ளிக்கூடம் முதலிய இடங்களில் கட்டாய பாடமாக்கப் பிரயத்தனப்படுவதும், யார் நன்மைக்கு? இனி கொஞ்சக்காலத்துக்குள் ஹிந்திப் பிரசாரத்தின் பலனை அநுபவிக்கப்போகிறோம். பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் ஹிந்தியும் ஒன்றாய் முடியும்போலிருக்கிறது. பொதுவாய் ஹிந்தி என்பது வெளி மாகாணங்களில் பிராமணமத பிரசாரம் செய்ய தர்ப்பித்து செய்யும் வித்தையாய் விட்டது. இந்த இரகசியத்தை நமது நாட்டுப்பாமர ஜனங்கள் அறியவேயில்லை. இரண்டொருவருக்கு அதன் இரகசியம் தெரிந்தாலும், பிராமணர்களுக்குப் பயந்துகொண்டு தாங்களும் ஒத்துப்பாடிவிடுகின்றார்கள். யாராவது துணிந்து வெளியிற்சொன்னால், இவர்களைத் தேசத்துரோகி என்று சொல்லிவிடுகிறார்கள்.

### சமஸ்கிருதம்.

இதல்லாமல், நமது நாட்டில் சமஸ்கிருத பாஷைக்காக எவ்வளவு லக்ஷம் ரூபாய் செலவாகிறது! அது அவ்வளவும் யாருடைய பணம்? சமஸ்கிருதத்திற்கென்று தனியாய், எவ்வளவோ பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இதில் படிக்கிறவர்கள் எல்லாம் யார்? இதன் உபாத்தியாயர்கள் யார்? பிராமணரல்லாத உபாத்தியாயரையாவது, பிராமணரல்லாத பிள்ளைகளையாவது இதில் சேர்த்துக்கொள்ளுகிறார்களா? அரசாங்கத்திலாவது சமஸ்கிருதத்திற்கு இருக்கிற யோக்கியதை தமிழுக்கு இருக்கிறதா? இச்சமஸ்கிருதம் பிராமணரல்லாதார், தாழ்ந்தவர்கள்—சூத்திரர்—பிற்பட்டவர்—அடிமைகள் என்பதற்கு ஆதாரமாயிருக்கிறதே தவிர, வேறு எதற்காவது—நாட்டிற்காவது உபயோகப் படுகிறதா?

### தமிழ்.

ஹிந்தியும், சமஸ்கிருதமும் இப்படியிருக்கத் தமிழைப்பற்றிப்போவென்றால், தமிழ் நாட்டில் தமிழுக்கென்று தனியாய் எத்தனை பள்ளிக்கூடம் இருக்கிறது? சமஸ்கிருதத்திற்கு இருக்கும் பள்ளிக்கூட

அவையில், நாவில் ஒருபங்காவது இருக்கிறதா? பிராமணரல்லாத தமிழ் வித்வான்கள் பேராவது, பொதுஜனங்களுக்குத் தெரியக்கூடியதாயிருக்கிறதா? பிரம்மஸ்ரீ உ. வெ சாமிநாதய்யர். ஸ்ரீலஸ்ரீ. ராகவய்யங்கார், இன்னும் ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ, அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், ரு வு, சர்மா, என்று பிராமணர்கள் பெயர்கள்தான் தமிழ்வித்வான்கள் லிஸ்ட்டிலும் அடிபடுகிறதேயல்லாமல், பிராமணரல்லாதார் பெயர் தெரிகிறதா? இந்தப் பிராமணர்கள்தான், பழைய தமிழ் காவியங்களின் ஏட்டுப் பிரதிகளைப் பிராமணரல்லாதாரிடமிருந்து வாங்கி, அதைத் தங்கள் பிராமண மதத்திற்கு தகுந்தபடி மொழிபெயர்த்துக் கொண்டு, அதை அச்சடிக்கப் பிராமணரல்லாதாரிடமே யாசகமாய்ப் பணம் வாங்கி, அச்சுப்போட்டு, புஸ்தகம் 1-க்கு 10 ரூ. 15 ரூபாய் என்று விற்றுக் கொள்ளை அடித்து லக்ஷக்கணக்காகப் பணம் சேர்த்துக்கொள்ளுகின்றார்கள். நிற்க, சர்க்காரில் தமிழுக்கு ஏதோ பெரிய யோக்யதை கொடுப்பது போல் வேஷம்போட்டு ஒரு தமிழ் அகராதி எழுதக்கமிட்டி ஏற்படுத்தினார்கள். அதில் [தமிழுக்கு வார்த்தைகள் கண்டுபிடித்து அர்த்தமெழுதத் தமிழ்படித்த—தமிழர்—பிராமணரல்லாத புலவர்களும், பண்டிதர்களும் எத்தனையோ பெயர் இருக்க, அக்கமிட்டிக்கு] நமது சார்பாய் பிராமணர்களே அங்கத்தினர்களாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய்களை வருஷக்கணக்காய்த் தின்று கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிராமணர்களால் ஏற்பட்ட தமிழ்தான்—தமிழ்அகராதிதான்—தமிழ் நாட்டிற்குத் தமிழாய்—தமிழுக்கு ஆதாரமாய், விளங்கப்போகிறது.

இது இப்படியிருக்க, மதுரையம்பதியில் தமிழ்ச்சங்கமென்று ஒரு சங்கமிருக்கிறது. ஆண்டவனே! இதன் கதை வெளியில் சொன்னால் வெட்கக்கேடு; இது பிராமணரல்லாதாரின் பைத்தியக்காரத்தனத்தையும், முட்டாள் தனத்தையும் நிலைநிறுத்தக்கல்லின்மேல் எழுத்துக்கு நேராயிருக்கிறது. அங்குள்ள தமிழ் பரீக்ஷை அதிகாரிகளும், தமிழ்சங்கத்திற்கு வருடாந்திரப் பிரசிடெண்டுகளும் 100 க்கு 90 பேர் பிராமணர்கள். அதிலும் "வீடுபிரித்துப்போட்டிருக்கிறது" என்று சொல்லுவதற்கு "வீடு அவுத்துப்போட்டிருக்கிறது" என்று பேசும் படியான பிராமணர்களை அக்கிராசனராகத் தெரிந்தெடுப்பதும் இச்சங்கத்தின் ...ற்சாக்ஷிப் பத்திரங்களாகும். சமஸ்கிருத ...த்தில் எங்காவது பிராமணரல்லாதார், பரிக்ஷை அதிகாரியாய் இல்லாவிட்டாலும் அங்கத்தினராகவாவது சேர்த்துக்கொள்ளப்படுகிறதா? இப்பொழுது எங்கேயோ, தமிழ் காலேஜ் என்று ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார்களாம். அதன் அதிகாரிகளும், படிக்கும் பிள்ளைகளும், அளவுக்கு மிஞ்சி பிராமணர்களே. அதன் செலவுக்கு மாத்திரம் பணம் பிராமணரல்லாதாருடையது. நமது பிள்ளைகளின் படிப்புக்கு அரசாங்கத்தின் மூலமாய்த்தமிழ் புஸ்தகம் எழுதிக்கொடுப்பவர்களும் பெரும் பாலும் பிராமணர்களே. அவர்கள் தமிழ்ப்புஸ்தகம் என்று பெயர் வைத்து அப்புஸ்தகத்தில், முக்கால்பாகம் சமஸ்கிருத வார்த்தைகளையே நிரப்பி பிராமணர்ஆசிரமத்தைப் பலப்படுத்துவதான விஷயங்களை நமது சிறு பிள்ளைகளுக்கும், இரத்தத்தில் கலரும்படியான கதைகளையும், வாசகங்களையுமே எழுதிப் பணமும் சம்பாதித்துகொள்ளுகிறார்கள். நம்மில் யாராவது, "தமிழ்புஸ்தகம் என்பது சுத்தத்தமிழில் எழுதவேண்டாமா? அவற்றிற்கேற்ற தமிழ் வார்த்தைகள் இல்லையா? நமது தமிழ்நாட்டின் பழக்க வழக்கம், நாகரீகம் அதில் இருக்கவேண்டாமா"? என்று கேட்டால், நம்மவர்களுக்குள்ளாகவே பாஷாபிமானம், பர்ஷாபிமானம் என்று பேசி நம்மை ஏமாற்றுபரும், பிராமண சிஷ்யர்களுமான சிலர், உடனே பிராமணர்களுக்கு வக்கலாத்து வாங்கிக்கொண்டு, சமஸ்கிருத வார்த்தைகள் தமிழில் கலந்தால் தமிழுக்கு யோக்கியதை குறைந்து போகாது; அப்படிக்கலருவது தான் பாஷையின் முன்னேற்றம்; பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவலகாலவகையினால்; என்று சாதனம் சொல்லுவதோடு இதிலுமா ஜாதித்துவேஷம் என்கிறார்கள். அப்படியானால் தமிழ் வார்த்தைகளோடு அடிக்கடி இங்கிலீஷ் முதலியபாஷைச் சொற்களைக்கலந்து பேசுவதில்—எழுதுவதில் என்ன குற்றம்? நமது வீட்டுப்பெண்களிடம் நாம் தண்ணீர் கொண்டுவா என்று சொல்லுவதற்குப் பதிலாக, நம்மால் சரியான உச்சரிப்பை உச்சரிக்கவும், தமிழில் எழுதவும், பழக்கமும், சவுகரியமும், இல்லாத சமஸ்கிருத வார்த்தையாகிய, சலம் கொண்டுவா, சளம் கொண்டுவா என்று சொல்லுவது குற்றமில்லையானால், அதற்குப்பதிலாக வாட்டர் கொண்டுவா என்று ஆங்கிலச் சொல் சொல்லுவதில் தப்பென்ன? தனித்தமிழ் என்கிற பதத்திற்கும், பாஷாபிமானம் என்கிற பதத்திற்கும் பொருள்தான் என்ன? இம்மாதிரி பாஷாபிமானத்திலிருந்தே, இவர்களது தேசாபிமானத்தின் யோக்கியதையையும் அறிந்து கொள்ளலாம். பழையன கழிந்து புதியன புகுவதாயிருந்தால், நமக்கொன்றும் கவலையில்லை; புதியவை வந்து பலாத்காரத்தில் புகுந்துகொண்டு, பழையவைகளைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளுவதானால், அதையும் சகித்துக்கொண்டு அதற்கு வக்கலாத்துப் பேசுவது என்பது பாஷைத்துரோகமும், சமூகத்துரோகமும் ஆவதோடல்லாமல், தமிழ்த்தாயின் கற்பை, தமிழ் துரோகிகளுக்கு சுயநலத்திற்காக விற்றவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். இம்மாதிரியே மற்றும் நமது அரசியல், மதம், பாஷை, கல்வி, ஆசாரம், நாகரீகம் முதலியவைகளில் பிராமணர்கள் எவ்வளவு தூரம் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள் என்பதும், அவ்வாதிக்கத்திற்கு நம்மவர்களிலேயே எவ்வளவு பேர் நம்மைக்காட்டிக்கொடுத்துக்கொண்டு வாழ்கிறார்கள் என்பதும், ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் சுயநலத்தை விட்டு நடுநிலைமையிலிருந்து யோசிப்பார்களானால் விளங்காமற் போகாது.

---

# பாதிரிமார்களும், ஆச்சாரியார்களும்.

நம் நாட்டு இந்து ஜனங்களுக்கு பாதிரிமார்களென்றால் ஒருவித பக்தியும், மரியாதையும் அவர்களிடம் ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் இரகசியத்தை நமது மக்கள் உணரவே முடியாமல் போய்விடுகிறது. பொதுவாக பாதிரிமார்கள் என்போர் ஆங்கில அரசாங்கத்திற்கு ஒரு நடுத்தூண் போன்றவர்கள். சுருக்கமாய் ஒருவார்த்தையில் சொலவதானால், அரசாங்கத்திற்கும், இந்திய குடிமக்களுக்கும் இடையில் உள்ள ஒற்றர்கள் என்றுதான் அவர்களைச்சொல்ல வேண்டும். அப்பாதிரியார்களிலேயும் உண்மையாய் கிறிஸ்துநாதருடைய கட்டளைப்படி நடக்கக் கூடியவர்களோ, நடக்க வேண்டும் என்கிற ஆசையுள்ளவர்களோ, சிலர் இருக்கலாம். நாம் நமது கண்ணுக்குத் தென்பட்ட அளவுக்கு பெரும்பான்மையானவர்களைப் பற்றி நமது அபிப்பிராயத்தை எழுதுவோம். ஒரு தேசத்தையோ, ஒருமதத்தையோ ஜெயித்துக் கைப்பற்றவேண்டுமானால், எப்படி திருடன் ஒரு வீட்டில் திருடுவதானால், கன்னம் வைத்து துவாரம் செய்துகொண்டு முதலில் தன் காலைவிட்டு பார்ப்பானோ, அதுபோல் பாதிரிமார்களை, அதாவது மதக்குருக்கள் என்பவர்களை, முதலில் அனுப்புவது என்பது ஒருவித தந்திரம். உதாரணமாக நமது நாட்டில் பிராமணர்கள் எப்படி தங்கள் மதத்தைக்காக்க—பரப்ப—தங்களுக்குள்ளாகவே ஒருவரை லோககுருவென்றும், ஆசாரியார் என்றும்; மடாதிபதிகள் என்றும், மகந்துக்கள் என்றும், சொல்லிக்கொண்டு அவர்களுக்கு மற்றவர்கள் பார்த்து பயந்து பக்திகொள்ளும் வண்ணம், அணிவிடை பணிவிடைகள் செய்வதும், கை வாய் பொத்திப்பேசுவதும், சுவாமிகள், சுவாமிகள் என்று கூப்பிடுவதும், அடியேன் அடியேன், என்று சொல்லிக் கொள்வதுமான தந்திரங்களைச் செய்து, தங்கள் மதப்பிரசாரம் செய்து (மதப்பிரசாரம் என்பது பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என்றும், தன்னைத்தவிர மற்றவர்கள் தாழ்ந்தவர்கள், என்றும் படும்படியான மனப்பான்மையை உண்டாக்கிவிடுவது) தங்கள் உயர் வாழ்க்கையை நிலைநிருத்த ஆக்கந்தேடிக் கொள்ளுகிறார்களோ, அதுபோல் ஐரோப்பியர்களும், தங்களுக்குள் ஒருவரை மதகுரு என்பதாக பேர்வைத்து நமது நாட்டுக்கு அனுப்புவதும், அவர் நமது நாட்டின் ரகசியங்களையும் இங்குள்ள ஜனங்களின் யோக்கியதைகளையும் அறிய மதப்பிரசாரம்செய்வதுபோல் ஏழைமக்களிடையும் பாமரமக்களிடையும் இடம்பொருள், ஏவல் என்கிற சவுகரியங்களால் திரிந்து பழகி அவர்களை தங்கள்மதத்திலும் சேர்த்துக்கொண்டு, தங்கள் சுவாதீனமும் செய்துகொண்டு நம் நாட்டு இரகசியங்களை அறிந்து, பிறகு நாட்டையே சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் செய்வதுமாயிருக்கிறது. இந்தப்பாதிரிகள் பெரும்பாலும் நமது குருக்கள்களைப் போலவே பார்வைக்கு கண்ணை மூடிக்கொண்டு, ஜபம் செய்பவர்களாயிருந்தாலும் அந்தரங்கத்தில் இவர்களும் அவர்களைப் போலவே பெரிய ராஜதந்திரிகளாய்த்தான் இருப்பார்கள். (ராஜதந்திரம் என்றால் தான் தெரியுமே! அதாவது பொய் சொல்லலாம்; உள் ஒன்று வைத்துப்புறம்பொன்று பேசலாம்; மோசம் செய்யலாம்; நம்பிக்கைத் துரோகம் செய்யலாம்; அதாவது, ஒரு காரியத்தைச் சாதிக்கவேண்டுமானால் எதையும், இன்னும் என்னவேண்டுமானாலும் செய்யலாம்; ஆனால் இதற்கு ஒரு விலக்குண்டு. அதாவது, இவ்வளவும் தனது சுயநலத்திற்காகச்செய்யக்கூடாது; பொது நன்மைக்காக என்று செய்யலாம் என்றும் இதற்காதாரமாகவும், பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில் என்கிற குறளையும் சொல்லிவிடுவார்கள்.

இதை நமது லோகமான்யர்களில் அநேகர் ஒப்புக்கொண்டாலும் நமது ராஜீயவாதிகளில் 100-க்கு 69 முக்கால் பேர் ஒப்புக்கொண்டாலும்—காரியத்தில் செய்து வந்தாலும், மகாத்மா காந்தியடிகள் மாத்திரம் இதைக் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளுவது இல்லை; இம்மாதிரி ராஜதந்திரத்தில் அவருக்கு நம்பிக்கையுமில்லை என்று தான் சொல்வார்கள், ஆனால் தாக்ஷண்யத்தாலும், வாத்சல்யத்தாலும், கருணையினாலும் சிலசமயங்களில் ஏமாந்து போய்விடுகிறார் என்று பலர் சந்தேகப்பட சொல்லிக் கொள்ளக்கூடும். ஆனால் அவரது சிஷ்யர்கள் வெகு பேருக்கு ராஜதந்திரத்தில் நம்பிக்கையுண்டு.—]

ஒவ்வொரு ஊரிலும் பிராமணர்கள் எப்படி கக்ஷி பிரதிகக்ஷி உண்டாக்கி ஆளைத்தூக்கி ஆள்மேல்போட்டு ஒரு கக்ஷியில் தாங்கள் சேர்ந்துகொண்டு பீசில்லாமல் பேசுவதும், விலையில்லாமல் கூட தீர்ப்பு கொடுப்பதுமாயிருக்கிறார்களோ, அதுபோலவே ஆங்காங்குள்ள பாதிரிமார்களும் தங்களுக்கனுகூலமாக ஒரு கக்ஷியில் சேர்ந்துகொள்வதும் வழியில்லா வழியில் அவர்களது அக்கிரமங்களுக்கு அனுகூலம் செய்வதுமான காரியங்களால் தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள்.

ராஜீய விஷயங்களிலும் யார் பேரைச் சொன்னால் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ளலாம் என்கிற எண்ணத்தை வைத்துக்கொண்டு, எப்படி நமது பிராமணர்களில் பலர் இரவும் பகலும் உள்ளத்தில் மகாத்மாவை திட்டிக்கொண்டிருந்தாலும், அவர்கள் கொள்கைகளை அழிக்கப்பிரயத்தனப்பட்டாலும், வெளியில் அவர் பேரைச்சொல்லிக்கொண்டு தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்கிறார்களோ அதுபோலும், ஒத்துழையாமை தத்துவத்திற்கு யோக்கியதை இருக்கிற காலத்தில் மனதில் ஒத்துழைத்து பதவியும் பணமும் சம்பாதிக்க ஆசை இருந்தாலும், ஒத்துழையாமையின் பெயரை சொல்லிக்கொண்டும், எப்படி தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்களோ, அதுபோலவே இப்பாதிரிமார்களும் மகாத்மாவின் கொள்கை உண்மையில் தங்கள் உத்தேசத்திற்கு விரோதமாயிருந்தாலும், மகாத்மா பெயரைச் சொல்லிக்கொண்டு தங்கள் காரியத்திற்கு ஆக்கம் தேடுவதும், சுயராஜ்யக் கட்சியில் உள்ள புரட்டுகளும், பித்தலாட்டங்களும் அதை நடத்துவோரின் நாணயக் குறைவுகளும் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும், இக்கட்சிக்கு யோக்கியதை ஏற்பட்டால் தங்கள் காரியங்களை தாராளமாய் நடத்தலாம் என்றும், இக்கட்சியின் பலனால் தங்கள் நாட்டுக்கும், தங்கள் கவர்ன்மெண்டுக்கும் நிம்மதி ஏற்பட்டு தாராளமாய் தங்கள் காரியம் நடந்தேறுமென்பதையும் மனதில் வைத்துக்கொண்டு, அக்கட்சியையும் கட்சியாளர்களையும் பாராட்டுவதும், அனுபோகத்தில் பார்த்து வருகிறோம் அப்படிக்கில்லாமல் இருந்தால் அஹிம்சை சத்தியம் முதலியதுகொண்ட ஒத்துழையாமையைப்பற்றி குற்றம் சொல்லி இந்தியர்களுக்கு புத்தியில்லையென்று சொன்ன பாதிரிகள், பொய்யும் புரட்டும் மோசமும் கொண்ட சுயராஜ்யக் கட்சி ஏற்பட்ட பிறகு இப்போதுதான் இந்தியர்களுக்கு புத்தி வந்திருக்கிறது என்று சொல்லுவார்களா? ஆசிப்பார்களா? என்பதை நுட்பமாய் கவனிப்பவர்களுக்கு தெரியாமற் போகாது. இந்தியர்களுக்கு சுவாமியார், குரு, சன்யாசி துறவி என்கிற பதங்கள் மிகுதியும் மரியாதை செய்யத்தக்கதாகிவிட்டதால், நம்மை ஏய்க்கவேண்டியவர்கள் இந்த வேஷத்தைப் போட்டுக்கொண்டு நம்மை ஏய்த்துத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள். அப்படிக்கில்லாமலிருக்கும் பக்ஷத்தில் நம்மை ஏமாற்றி நம்மை இழிவுபடுத்தி நமது இரத்தத்தை உறிஞ்சவந்த பாதிரிமார்களுக்கும் சங்கராச்சாரியார்களுக்கும், லோக குருக்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மகந்துக்களுக்கும் நாம் இவ்வளவு குருட்டு பக்தி வைப்போமா?

## இந்து மகாசபையின் உண்மை நிறம்!

### சிரத்தானந்தரே அறிந்து விலகிக்கொண்டார்

நமது நாட்டில் இந்து மகாசபை என்னும் பேரால் ஒரு பிராமண வருணாசிரமசபை ஏற்பட்டிருப்பதைப்பற்றி நாம் பலமுறை, அது இந்தியாவை அன்னியருக்கு காட்டிக்கொடுப்பதற்கு ஆதாரவாயிருந்த—இருக்கிற பிராமண வருணாசிரமத்தை நிலைநிறுத்தவும், இந்துக்களும், முஸ்லீம்களும், ஒன்றுபடமுடியாதபடி மத்தியில் ஒரு தடை கல்லாயிருக்கவும் (ஏனென்றால் இந்துக்களும், முஸ்லீம்களும், ஒன்றாய்விட்டால் சர்க்காரைவிட வர்ணாசிரமிகளுக்கு பெரிய ஆபத்து) ஏற்பட்டதென்றும் பிராமண சூழ்ச்சிகள் பலவற்றில் இதொன்று எனவும் பேசியும், எழுதியும் வந்திருக்கிறோம். அதற்கு ஆதாரமாகவும் தமிழ் நாட்டிலுள்ள இந்து மகா சபைக்கு வடிகட்டின வருணாசிரமியான ஸ்ரீமான். T. R. ராமச்சந்திரய்யர் அக்கிராசனராயிருப்பதும்; ஒரு வேளை சாப்பாடு ஒரு பிராமணக்குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் ஒரு மாதம் பட்டினிக்கிடப்பேன் என்று சொன்ன ஸ்ரீமான் M. K. ஆச்சாரியார் முதலியோர் முக்கியஸ்தர்களாகவும் இருப்பதோடல்லாமல், தமிழ் நாட்டிலுள்ள கிளை இந்து மகா சபைகள் இரண்டொன்றில் தீண்டாமையை ஒழிப்பது தப்பு என்றும், இது விஷயத்தில் பிராமணர்கள் முயற்சியாயிருந்து அதை எதிர்க்கவேண்டும் என்றும், தீர்மானித்திருப்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அல்லாமலும் அதன் அதி முக்கியஸ்தர்களில் முக்கியஸ்தரான ஸ்ரீமான் பண்டித மாளவியா அவர்கள் இந்து மகா சபையில் பேசும்போது, தீண்டாமை ஒழியவேண்டும் என்று பேசுவதும், வருணாஸ்ரம பரிபாலன சபையிலிருக்கும்போது தீண்டாமையை ஒழிக்கக்கூடாது என்கிற தீர்மானங்கள் நிறைவேற்றுவதுமாயிருக்கிற தந்திரங்களையும், தீண்டாதாருக்கு மிகஉருக்கமாய்ப் பரிந்து பேசுவதுபோல் சிற்சில சமயங்களில் மாய்மாலக்கண்ணீர் விடுவதையும், எடுத்துக்காட்டியிருக்கிறோம். இந்து மகா சபையின் தந்திரத்தை அறிய இவ்வளவும் போராது. என்று சொல்லுகிறவர்களுக்கு மறுபடியும் ஆதாரங்கள் காட்டவும், பண்டித மாளவியா அவர்களின் உள் கருத்தையும், உண்மை நிறத்தையும், ஆசார திருத்தத்தில் அவருக்குள்ள கவலையின் நிலைமையையும் வெளியார் அறிய சமீபத்தில் மற்றொரு சம்பவமும் நடந்திருக்கிறது. அதாவது, இந்து மகாசபையின் ஒரு கூட்டத்தில் விதவைகள் புனர்விவாகம் செய்துகொள்ளலாம் என்பதாக ஒரு தீர்மானம் ஏகமனதாய் ஒரு பெரிய விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேறிற்று. இது விஷயத்தைப்பண்டித மாளவியா கேள்விப்பட்டதும் இவ்விஷயம் மகா நாட்டுக்கு கொண்டுவரப்பட்டால் மகா நாட்டுப் பந்தலைக் கூட நான் எட்டிப்பார்க்கமாட்டேன். என்று சொல்லிவிட்டார். இதை அறிந்த சுவாமி சிரத்தானந்தர் உடனே இந்து மகாசபை நிர்வாகத்திலிருந்து விலகிக்கொண்டார். ஆதலால் இந்து மகா சபை வர்ணாஸ்ரம சபை என்பதற்கும், ஆசார திருத்தக்காரர்களை ஏமாற்ற ஏற்பட்டதென்பதற்கும், இவற்றைவிட இன்னும் என்ன ஆதாரங்கள் வேண்டுமோ நமக்குத்தெரியவில்லை. இவ்வளவையும் அறிந்து நம்மவரில் சிலர் வேண்டுமென்றே இந்து மகா சபை, இந்துக்கள் என்போர்கள் எல்லாருக்கும் பொதுவானது; பொதுவானது என்று சொல்லுவார்களானால், அதற்கு நாம் என்ன செய்யலாம்? உண்மையில் தூங்குகிறவர்களை தட்டி எழுப்பலாம்; ஞாபகத்துடனேயே வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டு தூங்குவதுபோல் படுத்திருப்பவர்களை எப்படி எழுப்புவது? தடி கொண்டுதான் தட்டவேண்டும்.

## சுயராஜ்ய கக்ஷியின் தேர்தல் உறுதிமொழி நிறைவேற்றல்!

சுயராஜ்யக்கக்ஷித்தலைவரான ஸ்ரீமான் S. சீனிவாஸய்யங்கார், செல்லுமிடங்களிலெல்லாம் ஜஸ்டிஸ் கக்ஷியார் கவர்ண்மெண்டு விருந்துகளுக்குப் போகிறார்கள்: கவர்னர் முதலிய கவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு விருந்து கொடுக்கிறார்கள்; நாங்கள் விருந்துக்கும் போகோம்; விருந்தும் கொடுக்கமாட்டோம்; ஆதலால் நாங்கள் ஒத்துழையாமை வாசனைக்காரர் என்று உறுதிமொழி கூறி ஓட்டு கேட்கிறார்.

இவ்வுறுதிமொழிக்கு ஜாமீன் கொடுப்பதுபோல் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் நம் சுயராஜ்ய கக்ஷியார் உறுதிமொழிப்படி நடப்பார்கள்; அதற்கு நான் ஜாமீன் என்று மேலொப்பமும் போடுகிறார். மேலொப்ப கையெழுத்து முடிவதற்குள்ளாகவே சுயராஜ்யக்கக்ஷி முக்கியஸ்தரான சென்னை கார்ப்பரேஷன் தலைவர் ஸ்ரீமான். சாமி. வெங்கிடாசலம் செட்டியார் கவர்னருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தருக்கும் விருந்து கொடுத்து வருகிறார்.

தேர்தல் பாக்கியிருக்கும்போதே, இவ்வளவு நாணயமாய் நடப்பவர்கள் தேர்தல் முற்றும்நடந்த பிறகு என்ன செய்வார்கள் என்பதை ஜாமீன்தாரரான ஸ்ரீமான்கள் ஆச்சாரியாரையும், சாக்ஷி கையெழுத்து போடுபவரான ஸ்ரீமான் முதலியாரையும் நம்புபவர்கள் தான் பதில் சொல்லவேண்டும்.

## சக்கரை என் நண்பரல்ல.

(நன்றி கெட்ட தன்மை.)

சென்னை கார்ப்பரேஷன் தேர்தலின் போது சென்னை கார்ப்பரேஷனை பிராமணக் கார்ப்பரேஷனாக்க ஸ்ரீமான்கள். சக்க்ரை செட்டியாரும், ஆதிகேசவ நாயக்கரும், பிராமணரல்லாதார் பலரும் அரும்பாடுபட்டார்கள். தங்கள் வகுப்பாரை வைதார்கள்; தேசத்துரோகி என்றார்கள்; சமூகத்துரோகி என்றார்கள்; இன்னும் ஒரு பயிர்க்காலுக்கு ஒரு கொட்டும் சொல்லி பாமர ஜனங்களை ஏமாற்றி பிராமண கார்ப்பரேஷன் ஆக்கினார்கள். பிறகு இவர்கள் கதி என்ன ஆயிற்று? ஸ்ரீமான் ஆதிகேசவ நாயக்கரைப்பற்றி எங்கு தேடிப் பார்த்தாலும் ஆசாமி இருக்கிற இடமே தெரியாமல் ஒழித்துவிட்டார்கள். ஸ்ரீமான் சக்கரை செட்டியாரைப்பற்றியோ வென்றால், நினைப்பதற்க்கே மயிர்க்கூச்சல் எடுக்கிறது. அதாவது சென்றவாரம் கார்ப்பரேஷன் மீட்டிங்கில் ஸ்ரீமான் சக்கரை செட்டியார், தனது அருகில் இருந்த ஒரு பிராமண நண்பரிடம் தனது நண்பர் எனிகிற முறையில், ஏதோ சில வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தாராம். அதை ஒண்டிக்கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு பிராமண மெம்பர் உடனே அதை கார்ப்பரேஷன் பிரசிடெண்ட் இடம் சாடி சொன்னாராம். பிரசிடெண்டு அப்படிச்சொன்னது தப்பு என்றாராம். அவ்வார்த்தைகள் மீட்டிங்கில் Officialஆய் மீட்டிங்குக்காக பேசவில்லை; நான் என் நண்பராகிய ஸ்ரீமான் புர்ரு. சத்தியநாராயணாவிடம் தனிப்பட்ட ஓதாவில் பேசினேன் அதற்கும் மீட்டிங்குக்கும் சம்பந்தமில்லை என்றாராம். உடனே ஸ்ரீமான் புர்ரு சத்திய நாராயணா என்னும் பிராமண மெம்பர் எழுந்து "சக்கரை செட்டியார் என் நண்பனல்ல என்றாராம். விவாதத்தின் தன்மை எப்படியோ இருக்கட்டும். அதைப்பற்றி நாம் இங்கு ஒன்றும் பேசவரவில்லை. ஆனால் இச்சம்பவத்தை நினைக்கும்போது, Dr. நாயர் பெருமான் தமிழ்நாட்டுக்காக—தமிழருக்காக லண்டனில் உயிர்துறந்த காலத்தில் அங்கிருந்த தமிழ் நாட்டு பிராமணர்கள் நடந்துக்கொண்ட நடவடிக்கை நமது ஞாபகத்துக்கு வந்ததோடு, நமது இரு கண்களிலும் தண்ணீர் வந்து காகிதத்தை நனைத்தது. இந்த ஸ்ரீமான். புர்ருவின் எலக்ஷனுக்கு ஸ்ரீமான் சக்கரை பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் எவ்வளவு பாடுபட்டார்; இந்த சக்கரையை இந்த பிராமணர்கள் எத்தனை கூட்டங்களுக்கு கூட்டிக் கொண்டு போய் நமது நண்பர் நமது தலைவர்; சக்கரை செட்டியார்; என்று அக்கிராசனம் வகிக்கச்செய்து ஜேய் போட்டார்கள். தங்கள் காரியம் முடிந்த உடன், இத்தனையும் மறந்து, ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் சக்கரை என் நண்பனல்ல என்று ஒரு பிராமணர் சொல்வாரானால், சக்கரை தனியாய் சமுத்திரக்கரை ஓரத்தில் நின்றிருந்தால், சமுத்திரத்தில் தள்ளுவதற்கு அஞ்சுவார்களா? இவ்வளவையும் செய்துவிட்டு "சக்கரை செட்டியாரின் அடங்காத்தனம், என்று பிராமணப் பத்திரிக்கைகள் தலையங்கம் போட்டு சக்கரை செட்டியாரையே கண்டித்தெழுதுகின்றன. சக்கரை முதலிய சக்கரை போன்றவர்கள் கதியே இப்படி இருக்குமானால் குழந்தை போன்ற குழந்தைகளின் கதி என்ன ஆகும் என்பதற்கு யாரும் ஜோசியம் கூறத் தேவையில்லை. ஸ்ரீமான் புர்ரு, சக்கரை செட்டியாரைக் காட்டிக் கொடுக்க ஆசையிருக்கும் பட்சம் ஸ்ரீமான் புர்ரு தனது நன்றி கெட்ட தன்மையைக் காட்டாமலே நடந்துக்கொள்ள வழியில்லாமல் போகவில்லை. கண்ணியமாய் எழுந்து, ஸ்ரீமான் சக்கரை என்னிடம் மெம்பர் என்கிற ஓதாவில் தான் பேசினார்; இவ்வார்த்தைகள் சபைக்குச் சொந்தமானதுதான்; எங்கள் சுயகாரியத்தைச் சேர்ந்ததல்ல என்று சொல்லியிருந்தால் நாம் அதில் குற்றம் சொல்ல நியாயமில்லை. அப்படிக்கில்லாமல், சக்கரை என் நண்பனல்ல என்று சொல்வது எவ்வளவு நன்றி கெட்ட தனம், கொலைபாதகத்தனம் என்பதை வாசகர்களே யோசிக்கவேண்டும். இந்த பிராமணர்கள் கண்ணுக்கு ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார், சுயராஜ்யக்கக்ஷி வகுப்புப் பூசலை உண்டாக்குகிறது என்று சொன்னவுடன்மாரீசனாய்த் தோன்றிவிட்டார், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பிராமணக்குழந்தை சாப்பிடுவதை பிராமணரல்லாத குழந்தை பார்த்தால்கூடக் குற்றமா என்று கேட்டதற்கு தென்னாட்டுத்திலகர் கூடமாறிவிட்டதுபோலத்தோன்றிவிட்டார்; ஸ்ரீமான் ராமசாமிநாயக்கர் மக்கள் பிறவியில உயர்வு தாழ்வு இல்லை, என்று சொன்னதற்கும் வகுப்புவாரி உரிமை கேட்டதற்கும், காங்கிரஸ் துரோகி ஆய்விட்டதோடு ஷை பிராமணர்களுக்கு இம்மூவரையும் காங்கிரசிலிருந்து விலக்கவேண்டியிருந்தது ஸ்ரீமான் ஆரியாவை அடிக்கவேண்டியிருந்தது; சிமான் சக்கரை செட்டியாரை நண்பரல்லாதவராக்க வேண்டியதாய்விட்டது. செய்நன்றி கொன்றுக்கு உய்வில்லை என்பதை அடியோடு மறந்துவிட்டார்கள். அல்லாமலும் இப்போது ஸ்ரீமான் முதலியாரும், நாயுடுவும் சுயராஜ்யக்கக்ஷி வகுப்புப்பூசலை உண்டாக்கும் என்று சொன்னது தப்பு; அதை மன்னிக்கவேண்டும் நாங்கள் முன் வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த வகுப்பு உரிமை கேழ்ப்பதுதான் வகுப்புப் பூசலை உண்டாக்கும்; சுயராஜ்யக்கக்ஷிதான் சத்தியமான கட்சி; என்று சொன்ன இந்தபிராமணர்கள் கண்ணுக்கு அவ்விருவர்களும் சுக்கிரீவன், அங்கதன் போல காணப்படுகிறார்கள். மற்றவர்கள் இன்னமும் மாறுததால் காங்கிரசை விட்டு விலக்க மதுரையில் சட்டம் செய்ய வேண்டியதாய் போய்விட்டது,

## தெருவில் நடத்தலும் சர்க்காரின் மனப்பான்மையும்

கோயமுத்தூர் ஜில்லா உடுமல்பேட்டை தாலுக்கா குமாரலிங்கம் என்னும் கிராம அக்கிரஹாரத்தில், ஒரு சர்க்கார் பொது தபாலாபீசு இருந்துவந்தது. அவ்வூர் அக்கிராரவாசிகளாகிய பிராமணர்கள் தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும், ஆதி திராவிடர்களை தீண்டாதார் என்னும் காரணத்தால் அந்தத் தபாலாபீசுக்கு செல்லவும் அவ்வீதியில் நடக்கவும் விடுவதில்லை. அதைப்பற்றி ஸ்ரீமான் R. வீரய்யன் சட்டசபையில் ஒரு கேள்வி கேட்டார். அதாவது 1924-ஹூ செப்டம்பர்-மீ 25-வ சகல பொதுத்தெருக்களிலும் சகல ஜாதி மனிதர்களும் நடக்கலாம் யாரும் ஆக்ஷேபிக்கக்கூடாது,—என்ற 2660-ம் நெம்பர் அரசாங்க உத்திரவு குமாரலிங்கம் பிராமணர்களுக்கு தெரிந்திருந்தும், அவர்கள் ஆதிதிராவிடர்களை தெருவில் நடக்கவிடாமல் தடுக்கிறார்களே; இதைப்பற்றி கேள்வியில்லையா என்று கேட்டார், அதற்கு சர்க்கார் மெம்பர் பதிலளித்ததாவது; இதுவிஷயத்தைப்பற்றி போஸ்ட் மாஸ்டர் ஜனரலுக்கு எழுதியிருக்கிறது; அவரும் ஷை தபாலாபீசை வேறு வீதிக்கு 'மாற்றிவிட்டார்; என்று பதிலளித்தாராம். இந்தப் பதிலைப்பார்த்தால், சாத்தூருக்கு தடம் எது என்று ஒருவர் கேட்டால், சாராயம் திராம் அஞ்சணா என்று பதில் சொல்வது போலிருக்கிறது. 2660 நெ. சர்க்கார் உத்திரவுப்படி வீதியில் மனிதர் நடக்கும்

---

பிராமண தர்மத்தின் பழக்கத்தை படித்தவர்களுக்கும், அவர்களோடு பழகினவர்களுக்கும், இதில் ஒன்றும் ஆச்சர்யம் இருப்பதாய்த் தோன்றவில்லை. ஆனால் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு அனுபவித்துக்கொண்டு இருக்கும், பிராமணரல்லாதாரில் சிலர் இன்னமும் இம்மாதிரி பிராமணர்கள் பின்னால் கவிபாடிக்கொண்டு தங்கள் மனச்சாக்ஷிக்குவிரோதமாய் அவர்களைத் தலைவர் தலைவர் என்று சொல்லிக்கொண்டு, அவர்களுக்கு ஆக்கந்தேடிக்கொடுத்து வயிறு வளர்க்கிறார்களே, இதை நினைக்கும்போதுதான் வெட்கம் உண்டாகிறது. இந்த பிராமணர்களின் காலைக்கழுவித் தண்ணீரைத் தீர்த்தமாகக் குடித்துக்கொண்டிருக்கும் வரையில் தான், தங்கள் கூடத் திரியும் பிராமணரல்லாதாரை ஆதரிப்பார்கள். அது முடிந்தவுடன் அல்லது கொஞ்சம் மாறினவுடன் பிராமணத் துவேஷி; காங்கிரஸ் துவேஷி என்கிற பட்டமும் முன்னவர்களுக்கு நடந்தகதியும் தான் நமக்கும் கிடைக்கும் என்கிற எண்ணம் பிராமணரல்லாத தலைவர் என்போர்களுக்கும் தொண்டர்கள், என்போர்களுக்கும் உண்மையாகவே தோன்றவில்லையா? அல்லது நடக்கிறவரையில் நடக்கட்டும், நமது காலத்தைக் கழிப்போம் என்கிற பேராசையா என்பதுதான், நமக்குப் புலப்படவில்லை.

## இந்து தேவஸ்தான சட்டம்.

இந்து தேவஸ்தான சட்டத்தைப்பற்றி பாமர ஜனங்களை ஏமாற்ற தமிழ் நாட்டு தேசிய பிராமணர்களில் பெரும்பாலோர் செய்த கிளர்ச்சி, ஸ்ரீமான்கள் ஈ.வெ. ராமசாமி நாய்க்கர் வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் போட்ட வெடிகுண்டினால் நசுக்குண்டு போயிருந்தாலும், வேறு விதமான பல தந்திரங்கள் இன்னமும் நடந்துகொண்டு தான் இருக்கிறது. அதாவது வைசிராய் இதற்கு அனுமதி கொடுக்கச் செய்யாமலிருப்பதற்கு எவ்வளவோ பாடுபட்டார்கள். அதுவும் தோல்வியுற்றது. இந்தியா சட்ட சபையில் எவ்வளவோ தந்திரம் செய்தார்கள். அதிலும் தோல்வியுற்றது. சீமைக்குப்போய் சக்கரவர்த்தியின் மூலம் இச்சட்டத்தை அழிக்கப்பார்த்தார்கள். அதிலும் தோல்வியுற்றது. கடைசியாக தங்கள் சட்ட ஞான தந்திரத்தைக்கொண்டு ஹைகோர்ட்டைப் பிடித்தார்கள். அங்கு ஏதோ கொஞ்சம் ஜயமடைகிறார்கள் போல் தோன்றுகிறது. அதாவது பல மடாதிபதிகள் பேரால் அவர்களிடம் வக்காலத்து வாங்கி இச்சட்டமே சட்டப்படி செல்லாதென்றே, இச்சட்டம் செய்ய சட்டசபைக்கு சட்டமில்லை என்றே, வாதம் செய்வி வழக்குத்தொடர்ந்திருக்கிறார்கள். வழக்கின் தன்மையைப்பற்றி இது சமயம் நாம் ஒன்றும் சொல்வதில்லை. ஆனால் ஒரு விஷயம். சட்ட சபையில் பிரேரேபணை வந்து மெஜாரிட்டியாரால் தீர்மானம் நிறைவேறி, கவர்னர் சம்மதம் பெற்று, இந்தியா சட்ட சபையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, ராஜப்பிரதிநிதியும் சம்மதம் கொடுத்து; சக்கரவர்த்தியும் ஏற்றுக்கொண்டு, அமுலுக்கு வந்த ஒரு காரியம், இவ்வளவும் தப்பின பிறகும் பூரா உறுதியாய் விட்டது என்று நினைப்பதற்கு இடமில்லையானால், இம்மாதிரி அரசாங்க அமைப்பைப்பற்றி நாம் என்னவென்று நினைப்பது? அரசாங்கமென்றால் கையில் பலத்தவன் காரியம் என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. திருவண்ணாமலையில் உள்ள ஒரு மடாதிபதியின் பிராதின் பேரில் தேவஸ்தான சட்டத்தை கொஞ்சக் காலத்திற்கு அம்மடத்து காரியத்தில் போர்டார் பிரவேசிக்கும் விஷயத்தில் தாற்காலிகமாக தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தமிழ் பத்திரிக்கைகளில் பார்த்தோம். பிராமணப்பத்திரிக்கைகள் சாதாரணமாய் இம்மாதிரி விஷயங்களைப்பற்றி எழுதும்போது தலைப்பில் ஜட்ஜுகள் பெயர் எழுதுவதுண்டு. ஆனால் இந்த வழக்கைப்பற்றி எழுதும்போது இன்னஜட்ஜு இம்மாதிரி தீர்ப்பு கூறினார் என்று எழுதவேயில்லை. தொடர்ந்தும் பார்த்தோம்; காணப்படவேயில்லை. இதினால் பெயரெழுதினால் ஜட்ஜு பிராமணரா பிராமணரல்லாதாரா என்பதை ஜனங்கள் அறிந்துவிடுவார்களே என்கிற எண்ணம் கொண்டோ, என்னவோ ஜட்ஜிகள் பெயரைக்கூட இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எழுதப் படுவதாயிருந்தால, இவர்கள் தந்திரத்தை என்னென்று சொல்வது? இவற்றைக்கவனிக்கும் போது என்னமாவது செய்து, யாரையாவது பிடித்து, இச்சட்டத்தை ஒழிக்கும்வரை ஓயமாட்டார்கள் என்பது திண்ணம். அதற்கேற்றாப்போல், தோட்டி முதல் தொண்டமான் வரை அநேக இலாக்காக்களில், இவர்களாகவே இவர்கள் ஆதிக்கமாகவே இருக்கிறது. போதாக்குறைக்கு அடுத்து வரும் சட்டசபையும், இவர்கள் மயமாகப் பலதப் பிரயத்தனங்கள் நடக்கின்றது. ஹைகோர்ட்டில் தேவஸ்தான சட்டம் அடிபட்டாலும், அடிபடாவிட்டாலும் அடுத்த சட்டசபை இவர்கள் மயமாகி இவர்கள் இஷ்டம்போல் ௸ சட்டத்தை உருக்குலையச் செய்யும் வரையில் ௸ சட்டம் அமுலில்லாமல் வைத்திருந்தாலும், போதும். கேசின் முடிவு எப்படியோ ஆகட்டும் என்பது சிலரின் எண்ணம். அம்மாதிரி எண்ணக்காரர்களுக்கு இவ்வுத்தரவு வெற்றி கொடுத்திருக்கிறதென்றே, சொல்லலாம். மற்றவைகள் ஹைகோர்ட்டு முடிவை பொருத்திருக்கிறது என்பது ஒரு பக்கமிருந்தாலும், முக்கியமாய் அடுத்த சட்ட சபைத் தேர்தலையே பொருத்திருக்கிறது; என்பது தான் நமது அபிப்பிராயம்.

ஆதலால், தேவஸ்தான சட்டத்தையும் ஒரு கையில் ஆதரித்துக்கொண்டு சட்டத்தை ஒழிக்க நினைக்கும் பிராமணர்களுக்கும், மற்றொரு கையில் வோட்டுவாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே அவர்களது உத்தேசம் என்ன என்பதை நாம் அறியமுடியவில்லை.

---

உரிமையைப் பிராமணர் அடுக்கிக்கொள்ளுகிறார்களே என்று கேட்டால், போஸ்டாபீசு வேறு வீதிக்கு மாற்றப்பட்டு விட்டது என்று சொல்லும் பதில், ௸ கேள்விக்கு சமாதானமாகுமா? ஸ்ரீமான். வீரய்யனுக்கும் நமக்கும் போஸ்டாபீசைப் பற்றியா அதிக கவலை? இவ்விஷயங்களை கவனிக்கும் போது குழந்தையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவது போலிருக்கிறது. இது போலவே பாலக்காட்டிலும் கல்பாத்தி தெருவு பொதுத்தெருவு அங்கு யாரும் நடக்கலாம் என்று சொல்லி விட்டு, இவர்கள் வார்த்தையை நம்பி நடந்தவர்களை அங்குள்ளவர்களால் அடிபட்ட பிறகு, இப்படி அடித்து விட்டார்களே என்று சொன்னால், நீ ஏன் அங்கு போனாய் என்று கேட்டு விட்டார்கள். மறுபடியும் ஒரு தடவை, அங்கு நடந்ததற்காக கேசு ஏற்பட்டு, மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டின் மூலம் நடந்தது குற்றமில்லை என்று விடுதலையாகியும் கூட, மறுபடியும் நடக்கும்போது வழி மறித்து அடித்துப் பயப்படுத்தி நடந்தவரிடமிருந்து, அந்த வீதிக்கு புண்யார்ச்சனை செய்ய 10 ரூபாய்க்கு பாண்டு எழுதி வாங்கிக் கொண்டார்களாம். இதைப்பற்றி கேசு நடப்பதாகவும் தெரிகிறது. இம்மாதிரி யெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது நல்ல சர்க்காருக்கு அழகாகுமா? நல்ல அரசு என்பது தன்னால்—தன் பரிசனத்தால்,-திருடரால், அயோக்கியர் முதலியவர்களால், தன் குடிஜனங்களுக்கு தீங்கு வாராமல் பார்த்துக் கொள்ளவேண்டாமா? அதை விட்டு விட்டு ஒருவனைப் பார்த்து நீ நட; வந்ததுக்கு நான் ஆச்சுது என்பதும், மற்றவனைப்பார்த்து, நீ விடாதே; வந்ததுக்கு நானாச்சுது என்பதும், இரண்டு பேரும் உதை போட்டுக்கொண்டும் வக்கீலுக்கும், போலிசருக்கும் அதிகாரிகளுக்கும் பணங்கொடுத்து, வாயும் கையுமாய் அலைவதைப்பார்த்து, இப்படியும் நம்ம ஆள்களுக்கு ஒரு வரும்படி ஆச்சுதே என்றும் ஒருவருக்கொருவர் வெகு சுலபமாய் உதை போட்டுக்கொள்ளும் படி செய்து விட்டோமே, என்றும் சிரித்துக்கொண்டு வேடிக்கை பார்ப்பதை நல்ல சர்க்கார் என்று சொல்ல முடியுமா?

ஸ்ரீமான். வீரையன் இம்மாதிரி பித்தலாட்டமான சட்ட சபையைக்கட்டி அழுவதை விட, மகாத்மா சொல்படி சத்யாக்கிரகம் செய்து குறைந்தது ஒரு ஆயிரம் தொண்டர்களையாவது ஜெயிலுக்கனுப்பவோ, அவசியமானால் உயிரைக்கொடுக்கச்செய்யவோ தயாராயிருப்பாரானால், நம் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான ஆதித்திராவிட மக்களை நரகத்திலிருந்து விடுதலை செய்தவராவார்.

## சுசீந்திரம் சத்தியாக்கிரகம்.

டாக்டர் எம்; ஈ. நாயுடுவுக்கும், திருவாங்கூர் அரசாங்க போலீஸ் கமிஷனருக்கும் நடந்துள்ள ராஜிப் பேச்சை முன்னிட்டு, சுசீந்திரம் சத்யாக்ரகம் தாத்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

## இந்திய சட்டசபைத் தேர்தல்.


சமீபத்தில் நடைபெறப்போகும் இந்தியா சட்ட சபைப் பொதுத்தேர்தலில் சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திரிச்சினாப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, ஜில்லாக்கள் அடங்கிய தெற்கு மகமதிய குரூப் தொகுதிக்கு நாகப்பட்டணம் கான்பகதூர் வி சுல்தான் ஹமீது மரைக்காயர் எம்;எல்சி., ஒரு அபேட்சகராக நிற்பதாகத் தெரிவிக்கின்றார்.

## ஊழியன் அவதூறு வழக்கு

(ஒரு நிருபரிடமிருந்து)

இவ் வழக்கைப்பற்றிச் சந்தாநேயர்கள் நன்கறிவார்கள். இராமநாதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டார் இம்மதி 15-ம் நாள் வெள்ளியன்று இராமேஸ்வரத்தில் வாய்தாவெனக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் வாதி அவர் தம் வக்கில் டி. சி. சீனிவாசய்யங்காரவர்களைக் கொண்டு இவ்வழக்கு மதுரையிலேயே விசாரிக்கப்படவேண்டுமென, இராமநாதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேட்டுக்கொண்டதாயும் அதற்கு மாஜிஸ்ட்ரேட் மறுத்து விட்டதால்; இராமநாதபுரம் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவர்களிடமும் மதுரையிலேயே அல்லது பரமக்குடியிலேயே வழக்கு விசாரிக்கப்பட வேண்டுமென முயற்சிக்கப்பட்டதாயும் அம்முயற்சியும் பயன்தராது போனதாயும் தெரிகிறது. இறுதியாக இம்மதி 15-ம் நாள் இராமேஸ்வரத்திலேலே வாய்தா நடந்தது. எதிரிதரப்புக்கு எதிரியும், திரு. எஸ். எஸ். பாரதி அவர்களும் ஆஜராயிருந்தனர். வாதி தாம் வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பதாயும் குணமாகப் பதினைந்து நாட்கள் செல்லுமென்றும் மெடிகல் சர்ட்டிபிகேட் வாங்கியனுப்பியிருந்ததுடன் கம்பிச்செய்தியும் அனுப்பியிருந்தார்.

பின்னர் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் இம்மதி 30-ம் நாள் சனியன்று இராமநாதபுரத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்படுமெனத் தெரிவித்தார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும் தானே.

குடி அரசு.

குரோதன-ஷூ மாசி-மீ உசு-உ

தங்கப்பெருமாள்.

# பாரதத் தாயின் துர்ப்பாக்கியம்

தமிழ் நாட்டின் அருந்தவப்பயன், நமது ஆருயிர் நண்பர் ஸ்ரீமான். வா. மு. தங்க பெருமாள் பிள்ளை இம்மாதம் 6-ந்தேதி காலை 4-மணிக்கு உயிர் நீத்தார் என்னும் சேதியை எழுதவே மெய் நடுங்குகிறது. அவருக்கு இன்னமும் ஆண்டு முப்பது கூட ஆகவில்லை. அவர் ஈரோடு முனிசிபல் எல்லைக்குள் கருங்கல்பாளையம் என்னும் கிராமத்தில் வாத்தியார் வீடு என்று சொல்லும்படியான புராதனமும் கண்ணியமும் வாய்ந்த ஒரு வெள்ளாளர் செல்வக் குடும்பத்திற்குச் செல்வமாய் பிறந்தவர். அவரது இளம் வயதிலே, அதாவது 12 வது வயதிலேயே தந்தை இறந்து போனார். ஆயினும், சிறிய தந்தையார் ஆதரவினால் கல்வி கற்கப்பட்டு தனது 21-வது வயதில் B.A. பட்டம் பெற்று 24 வயதில் B.L. பட்டமும் பெற்று ஈரோடு ஜில்லா முனிசீப்பு கோர்ட்டில் 1921-ம் வருஷத்தில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். ஆரம்பித்தமாதமே 200 ரூபாய் வரும்படி கிடைத்தது. அடுத்த மாதம் 250 ரூ. வரும்படி கிடைத்தது. மற்றும் இரண்டொரு மாதங்களிலேயே மாதம் 300 ரூபாயிக்கு மேல் வரும்படி வந்து கொண்டிருக்கும் படியான நிலைமை ஏற்பட்டதோடு, ஊருக்குள் பிரபலமும், செல்வாக்கும் ஏற்பட்டு, தான் படித்து வந்த மகாஜன ஹைஸ்கூல் என்னும் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நிர்வாக அங்கத்தினராயும், ஈரோடு நகரபரிபாலன சபைக்கு ஒரு நிர்வாக அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கும்படியான பொதுஜன அபிமானத்தைப் பெற்றார். அவர் தனக்கு விபரம் தெரிந்தகாலம் முதலே பொது விஷயங்களில் ஊக்கமும்- தன்னைப்போன்ற இளம் வாலிபர்களின் மிகுதியான கூட்டுறவும் தமிழ் பாஷையினிடம் ஒருவித தனிப்பற்றுதலும், உடையவராயிருந்ததோடு தனது ஊராகிய கருங்கல் பாளையத்தில் ஒரு சிறு வாசக சாலை என்பதாக ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் பொது நலவிஷயங்களையும், தமிழர் பெருமையையும், பற்றி அடிக்கடி தமது நண்பர்களிடம் பேசுவதும், அவ்வாசகசாலைக்கு வருஷா வருஷம் ஆண்டுவிழா என்னும் பேரால் தமிழ் நாட்டு பெரியார்களை, அதாவது ஸ்ரீமான்கள் பாரதியார், வரதராஜுலு நாயுடு, வ. வெ. சு. அய்யர், திரு. வி. க. முதலியார். மூ. வெ. நாட்டார் முதலியவர்களை தருவித்து கொண்டாட்டங்கள் நடத்துவதுமான விஷயங்களில் பெரிதும் தனது சகாக்களோடு ஊக்கங்காட்டி வந்தவர். இன்னிலையில் 4, 5 மாதம்கூட தனது வக்கீல் தொழில் நடத்தியிருக்க மாட்டார். இதற்குள்ளாக காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கம் ஆரம்பமாயிற்று. தனது வக்கீல் தொழிலோடு ஒத்துழையா இயக்க சம்பந்தமான பொதுக் கூட்டங்கள் ஈரோட்டில் நடைபெற்று வந்த சமயங்களில், நமது பிள்ளை அவர்களே அநேகமாய் அக்கிராசனம் வகிக்க கேட்டுக்கொள்ளப்படுவதும், இவரது அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமான். ஈ வெ. ராமசாமி நாய்க்கர் முதலியோர் பேசுவதும் வழக்கமாயிருந்தது. இப்படியே இருக்க ஒரு நாள் கூட்டத்தில் நமது பிள்ளையவர்கள் தனது முடிவுரையில் தான் நாளை முதல்கொண்டு வக்கீல் தொழிலுக்கு போவதில்லை என்கிற சேதியை அறிவித்துவிட்டார். இவ்வறிவிப்பானது அக்கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் அவரிடம் அளவு கடந்த பக்தியும் அன்பும் ஏற்படுத்திவிட்டது. பிறகு காங்கிரஸ் நிர்வாகத்திலும், அவர் இழுக்கப்பட்டார். உடனே ஜில்லாகாரியதரிசி ஆனார். அடுத்தாப்போல் மாகாண நிர்வாக சபை அங்கத்தினரானார். பெயர் பெற்ற ஈரோடு கள்ளுக்கடை மறியலில், இவர் குற்றஞ்சாட்டப்பட்டு நாயக்கர் உள்பட 40 தொண்டர்களோடு மேஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டு சிறை வாசமிருந்தார். சிறையினின்று வெளி வந்ததும், அதி மும்மரமாக ஜில்லா முழுதும் சுற்றும்படியான வேலையில் தனது மெல்லிய சரீரத்தின் சவுகரியங்களையும், தனது வாழ்க்கை போகத்தின் பழக்கங்களையும், கொஞ்சமும் கவனியாமல் கிரமம் கிரமமாய் திரிந்து வேலை செய்து வந்தார். இன்னிலையில் ஜில்லாதலைவராகவும், மாகாண காரியதரிசியுமானார். இதன் பலனாய் மாகாணமெல்லாம் சுற்றவும் திருச்சியில் மாகாண கமிட்டி காரியாலயத்தை தன் பத்தினி சகிதமாய் போய் மாதக்கணக்காய் குடியிருந்து வேலை செய்து வந்தார். ராஜீயநிலை மாறியதில் குழப்பத்தின் பலனாய், காங்கிரஸ் நிருவாகத்தில் கலந்து கொள்ள இஷ்டமற்றவராகி, சகலவித நிர்வாகத்திலிருந்தும் விலகிக்கொண்டு, "குடி அரசு" என்னும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்த முற்பட்டார், இது சமயம் கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஏற்றுக் கொள்ள வலியுறுத்தப்பட்ட தாலும் உடல் நலிவு ஏற்பட்டு படுக்கையில் கிடக்கத்தக்க அசவுகரியத்தோடு இருந்ததாலும், குடி அரசு நிர்வாகத்தை நாய்க்கரிடம் ஒப்புவித்துவிட்டு விலகினார். அடுத்தாற்போல் உடல் நலம் செய்துகொள்ள, சென்னைக்குப் போகவேண்டியிருந்ததால், கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஸ்ரீமான் நாயக்கரிடம் ஒப்புவித்துவிட்டு சென்னைக்குப்போனார். அங்கும் ஒன்று இரண்டு மாதம் இருந்து, சிகிச்சை செய்து கொண்டார். பின் வைத்தியர்கள் அனுமதியின் பேரில், ஊருக்கு வந்து 3, 4 மாதகாலம் படுக்கையிலேயே யிருந்து சிகிச்சை செய்து வந்தார். என்ன செய்தும் அதிசாரக்கழிச்சல் என்னும் அவருக்கு ஏற்பட்ட வியாதி குணப்படாமல், அவரது முடிவுக்கே கூற்றுவனாயிருந்து கொள்ளைகொண்டு விட்டது. படுக்கையில் இருக்கும்போதும், எழுதுவதும் படிப்பதும் சவுக்கியமான பிறகு தேசத்திற்கு என்ன செய்வது என்று வேலை திட்டம் போடுவதிலும் காலத்தைக் கழிப்பார். யாரிடமும் கடினமாகப் பேசமாட்டார். ஒருவருக்கும் மனவருத்தம் ஏற்படும்படி நடக்கமாட்டார். தான் சொல்லுவது உண்மையானாலும் அதனால் யாருக்காவது சலிப்பு ஏற்படும் என்று பட்டால் பயந்து திருத்திக்கொள்வார். தாராளத்தையன். தமிழ் நாட்டுத் தொண்டர்கள் எத்தனையோ பேர் அனேகர் அவரிடம் வந்து அடிக்கடி ஏதாவது பெற்றுப்போவார்கள். நண்பர்களுக்கு சமயங்களில் அவரைப்போல் உதவி செய்பவர்கள் மிகச் சிலர்தானிருப்பார்கள். இல்லை என்று சொல்லுவதானால் தனக்குள் ஒரு பெரிய பாவத்தைச் செய்கிறோமே என்று நடுங்குவார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அனேக புத்தகங்கள் வாசித்தவர். தமிழ் நாட்டிலுள்ள தமிழ் ஆராய்ச்சிக்காரர்களில் நமது பிள்ளையும் ஒரு முக்கியமானவர் என்று சொல்லவேண்டும், அவர் காரியாலயம் ஒரு புத்தகாலயம்போல் இருக்கும். ஆராய்ச்சி ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று எப்பொழுது பார்த்தாலும் இதேவேலைதான். நமது நாட்டில் மக்கள் உயர்வு தாழ்வு என்பது எப்படி ஒழியும் என்கிற கவலை அவருக்குள்ள மற்ற எல்லாக்கவலையையும்விட, முன்னின்று கொண்டேயிருந்தது. முடிவாய்க் கூறுமிடத்து, தன்னலத்தியாகத்தில் ஈடற்ற ஒரு தேசபக்தர்—உண்மைத் தொண்டர் அஞ்சா நெஞ்சர்-ஆருயிர்த் தோழர்-தமிழ்நாட்டின் ஒரு முக்கியஉருப்பு-கோவை ஜில்லாவின் வலக்கண்-ஈரோட்டின் முடி மறைந்ததென்றுதான் சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட ஒரு ரத்தினத்தைப்பிரிந்த அவரது குடும்பத்தார்- ஆருயிர்போன்ற மனைவி—பரதன் போன்ற தம்பி முதலியோர்களுக்கும், கன்றை இழந்த தாய் போன்ற தமிழ் மக்களுக்கும் ஈசனே ஆறுதல் அளிப்பாராக—

## அநுதாபக் கூட்டம்

ஸ்ரீமான். தங்கப்பெருமாள் பிள்ளையவர்கள் காலமானதைக் குறித்து இம்மாதம் 6-ந்தேதி மாலை 7 மணிக்கு ஈரோடு அலிசதுக்கத்தில் ஓர் பெரிய அநுதாபக் கூட்டம், ஸ்ரீமான். முத்துக்கருப்பன் செட்டியாரவர்கள் தலைமையில் கூடியது. ஸ்ரீமான்கள். இக்னேஷியஸ், கோயமுத்தூர் கே. சுப்பிரமணியம், கிரித்திவாஸ், ஈரோடு, எஸ். டி. சுப்பிரமணியம், ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோர்கள் பேசியபின், ஓர் அனுதாபத் தீர்மானமும், காலஞ்சென்றவருக்கு ஞாபகக் குறிப்புச் செய்ய வேண்டு மென்ற தீர்மானமும் சபையோரால் எழுந்து நின்று தீர்மானிக்கப்பட்டது.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

மதுரையில் சென்ற வாரம் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தையும் அதன் நிர்வாகக் கமிட்டி கூட்டத்தையும் கவனித்தவர்கள் தமிழ்நாட்டின் காங்கிரஸ் பொது ஜனங்களுடையதா? அல்லது பிராமணர்களுடையதாய் போய்விட்டதா? என்பதை உணராமலிருக்கமாட்டார்கள். அக்கூட்டம் மிகவும் முக்கியமானதாயிருந்தும், அதாவது நமது மாகாண சட்டசபைக்கு தமிழ்நாட்டின் சார்பாக அபேக்ஷகர்களை நிருத்துவதற்கென்று இவ்வருஷத்திய வேலைதிட்டம் தயாரிக்க என்று சொல்லியும், நிர்வாகிகளான பிராமணரல்லாத இந்துக்கள் யாரும் போகவேயில்லை. ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு 1, கல்யாணசுந்திர முதலியார் 2, மருதவாணம் பிள்ளை 3, கிருஷ்ண செட்டியார் 4, R. K. ஷண்முகம் செட்டியார் 5, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் 6 ஆகியவர்கள் போகவில்லை. சென்னையிலிருந்து தனக்கு வேண்டிய சிலரைக் கூட்டிக்கொண்டு ஸ்ரீமான். S. சீனிவாசய்யங்கார் போனார். அவருக்கு உதவி செய்ய "காங்கிரஸ்மனு" ஸ்ரீமான். C. ராஜகோபாலாச்சாரியார் போனார். இருவரும் சேர்ந்து அங்கிருந்து கொண்டு தங்களுக்கு வேண்டிய சிலரைத் தந்தி கொடுத்துத்தருவித்து தங்கள் இஷ்டம்போல் காரியம் நடத்தத்தக்க கோரத்தை உண்டாக்கிக் கொண்டார்கள். அப்புறம் என்ன செய்தார்கள்?

1. தீண்டாமைக்காக ஒதுக்கிவைத்த பணத்தை (தீண்டாமை ஒழியக்கூடாது என்று சொல்லுகிற பிராமணர்கள் சட்டசபைக்குப்போய் தீண்டாமை நிலைநிருத்த, ஓட்டுவாங்க) எலக்ஷனுக்கு செலவு செய்வது என்பது ஒன்று

2. காங்கிரஸ் பணத்தில் 10000 ரூபாய் ரொக்கம் எடுத்துக்கொடுத்து மகாத்மா திட்டத்தை நிறைவேற்ற ஒரு பத்திரிகை வேண்டுமென்று, ஒளிபபோயும், தலைபாரி வீட்டில் புகுந்தது போல், 10000 ரூபாயைத்தூக்கி ஒரு பிராமணரிடம் கடனாக கொடுக்க அதை வாங்கிக்கொண்டு, உத்தேசத்திற்கு விரோதமாகவும், பணத்திற்கு முக்கிய சொந்தக்காரரான பிராமணரல்லாதாருக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்யும் ஒரு பத்திரிகைக்கு உபயோகப்படுத்திக்கொண்டதல்லாமல், சத்தியாக்கிரகியான ஸ்ரீமான் பிரகாசம் கடைசியாய் பணமே கொடுக்கவேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார். முடிவில் கோர்ட்டுக்குப் போய் பணம் வாங்கவேண்டிய நிலைமைவர, மகாத்மாவிடம் பஞ்சாயத்திற்கு அனுப்புவது என்று தந்திரம் செய்து, ஏமாற்றி அந்நிலையில் இருந்து தப்பித்துக்கொண்டார், பிறகு மகாத்மாவிடம் பைசலுக்குப் போக மகாத்மாவோ, முன்னால் பார்த்தால் நாயக்கர் குதிரைபோல் தெரிகிறது; பின்னால் பார்த்தால் அய்யர் குதிரைபோல் தெரிகிறது; என்கிற மாதிரியில் பணம் திருப்பிக் கொடுக்கவேண்டியதுதான்; ஆனால் அது எப்பொழுது கொடுக்கவேண்டியது; எப்படிக்கொடுக்கவேண்டியது; என்பதை நான் ஒன்றும் இப்போது சொல்லமுடியாது; நீங்களே பைசல் செய்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். இந்தப் பைசல் ஏற்படுவதற்குள் காங்கிரஸ் நிருவாகம் வேறு ஒருவர் கைக்கு போய்விட்டது. இப்போது அந்தப்பணம் லிமிட்டேஷன் பார் ஆய்விட்டதென்று ஒரு பெரிய வக்கீலும், காங்கிரஸ் கமிட்டி தலைவரான ஸ்ரீமான் S. சீனிவாசய்யங்காரே சுயராஜ்யா கம்பனிக்கு வக்காலத்து பேசுவதுபோல அது லிமிட்டேஷன் பார் ஆகிவிட்டது என்று மதுரை கமிட்டியில் சொல்லி செலவெழுத தந்திரம் செய்யப்பட்டது. பக்கத்தில் இருந்தவர் அதை ஒப்புக்கொள்ளாமல் அப்படியானால் லிமிட்டேஷன் பார் ஆகும் வரை கொடுக்காமலிருந்தவரைப்பற்றியும், லிமிட்டேஷன் ஆகவிட்டவர்களைப் பற்றியும் கண்டனத் தீர்மானம் செய்யவேண்டுமென்று சொல்ல, மெள்ள, மெள்ள கொடுப்பார்கள் என்று அய்யங்கார் சமாதானம் சொல்லி அந்தப்பணத்தையும் வர வர பிரசாரத்திற்கு நிர்வாகச் செலவு செய்வது என்று பேசி முடிவு செய்து கொள்ளப்பட்டது. (3) போராததற்கு கட்டடத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட 30 ஆயிரம் ரூபாயிலிருந்தும், எடுத்துக்கொள்ளலாம் என்றும் பேசி முடிவு செய்துகொள்ளப்பட்டது.

4. காங்கிரஸ் விதிகளிலும் தங்களுக்கு சவுகரியமான படி திருத்திக் கொள்ளப்பட்டது. இவற்றில் சிற்சிலரை காங்கிரஸ பதவியிலிருந்து தள்ளிவிடவும் தகுந்தபடி சட்டத்தில் ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டது. அப்புறம் இனி என்ன வேண்டும்?


சட்டசபைக்குக் காங்கிரசின் பேரால் அபேக்ஷகர்களை நிருத்தும் அதிகாரம் வேண்டும்; அதுவும் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காருக்கு கொடுக்கப்பட்டது. அது நிர்வாக சபைக்கு என்று இருந்தாலும், நிர்வாக சபையாரோ போவதிலலை; ஏன் அவர்களுக்கு வெட்க்கம். ஆதலால் தலைவர் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரும், காரியதரிசி ஜனாப் அமீத்கானும் முறையே சொல்லவும் எழுதவும் வேண்டியது தான். பாக்கி அப்புறம் என்ன வேண்டும்.? அய்யங்காருக்கு இஷ்டமில்லாத வேறு யாராவது காங்கிரஸ் பேரைச்சொல்லிக்கொண்டுநின்றுவிட்டால், அது அவருக்கு கஷ்டமாய் முடிந்து விடுமே. ஆதலால் அய்யங்காரிடம் 1000 ரூ கொடுத்து வரம் பெறாதவர்களை காங்கிரஸ் பேரால் நிற்கக்கூடாது என்கிற ஒரு தீர்மானம் வேண்டும். — அதுவும் அவ்விதமே செய்து கொள்ளப்பட்டது. இன்னும் என்ன வேண்டும்? இனி பிரசாரகர்கள் வேண்டும். சரி, அதையும் தன் இஷ்டப்படி சம்பளம் கொடுத்து நியமிக்கவும் அதிகாரம் பெற்றதாக ஆய்விட்டது.

அப்புறம் என்னவேணும்? ஸ்ரீமான் அய்யங்கார் இஷ்டம்போல் அபேக்ஷகர்கள் தெரிந்தெடுக்கப்பட்டாலும் தெரிந்தெடுத்தபின், தான் சொல்வது போலெல்லாம் நடப்பதாய் அவர்களிடம் சத்தியம்வாங்க வேண்டுமே; இல்லாவிட்டால் ஸ்ரீமான் சக்கரை செட்டியாரைப்போல் ஆய்விட்டால் என்ன செய்வது? ஆதலால் அதற்கொரு பந்தோபஸ்து வேண்டாமா? ஆ; ஆ; அவசியம் வேண்டும். அது வும் நிறைவேறிற்று. எப்படி? நான் தெரிந்தெடுக்கப்பட்டால், காங்கிரஸ் (அதாவது தாங்கள்) கட்டளை இடுகிறபடி நடந்துகொள்ளுகிறேன். முடியாவிட்டால், ராஜிநாமா செய்துவிடுகிறேன் என்பது.

இனி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் சுயராஜ்யா பார்ட்டிக்கும் என்ன குறை.

நேரில் கண்டோன்.

# பிராமணர்களின் ஓட்டுப் பிரசாரம்.




## கோயமுத்தூரில் நாடகம்

இடம் — ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமண அய்யங்காரின் தோப்பு

பின்புறம் — ஸ்ரீ அய்யங்காரின் தென்னைமரங்களில் கள்ளுமுட்டிகள் தொங்குகின்றன.

முன்புறம் — கோயமுத்தூர் ஜில்லா குடியான நாயக்கர் மார்கள் கூட்டம். அக்கிராசனர், சரிகை தலைப்பாகையும் அன்னியநாட்டுத் துணியும் அணிந்திருக்கும் தோப்பின் சொந்தக்காரர் ஸ்ரீமான். வெங்கிட்டரமண அய்யங்கார்.

உபந்யாசகர் — ஸ்ரீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் நின்றுகொண்டு ஸ்ரீமான் அய்யங்கார் மிகுந்த கதர்பக்தியுள்ளவர்; ஒரே அடியாய் கள்ளை நிருத்தி விடுவார்; ஆதலால் அய்யங்கார் அவர்களுக்கு ஓட்டுகொடுங்கள். இதுதான் மகாத்மாவின் இஷ்டம் என்கிறார்.

நாடகத்தின் பெயர்-இனம் இனத்தைக்காக்கும்:-

## கொங்கு வேளாளர்
### 3-வது மகா நாடு.
### பொள்ளாச்சி

20-21 பிப்ரவரி.

கொங்கு வேளாள குலத்தினரின் **3-வது** மகாநாடு 20-21—2—26 சனி, ஞாயிறு இவ்விருதினங்களில் பொள்ளாச்சி வேளாள யூனியன் பருத்தி யந்திரசாலையில் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில், சேலம் ஜில்லா பாலி ஜமீன்தார் ஸ்ரீமான் சிக்கையக் கவுண்டரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

20-ம் தேதி காலை 9-30 வண்டியில் ஸ்ரீமான்களான சிங்கைகவுண்டர், E. V. ராமஸ்வாமி நாயக்கர், C. ராஜகோபாலாச்சாரியார், முதலிய தலைவர்கள் பொள்ளாச்சி ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். மகாநாட்டின் உபசரணைக் கமிட்டியின் சார்பாக ஸ்ரீமான்கள் V. C வெள்ளியங்கிரிக் கவுண்டர், K. S. ராமசாமி கவுண்டர், புக்கபாளையம் மிட்டாதார் ரத்தினசபாபதிக் கவுண்டர், P. ரத்தினசபாபதிக்கவுண்டர், முதலிய கனவான்கள் ஸ்டேஷனில் தலைவர்களை வரவேற்று எல்லோருக்கும் மாலையிட்டு இருபுறமும் வாலண்டியர்கள் வரிசையாக நிற்க ஜெயகோஷம் முழங்க பாண்டு வாத்தியங்களும் நாதஸ்வர வாத்தியங்களும் முழங்க தலைவர்களை மோட்டார் வண்டியில் ஏற்றி முன்புறம் யானை வழிகாட்ட, பின்புறம் வரிசையாக மோட்டார்களும் வாத்திய கோஷத்துடன் ஊர்வலமாய் விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

## மகாநாடு ஆரம்பம்.
### 20-2-26 தேதி நடவடிக்கை.

மகாநாடு பகல் 1-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பந்தல் மிக்க அழகாக அமைக்கப்பட்டிருந்தது. வழிநெடுக தோரணங்களாலும் வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தலைவர்கள் எல்லோரையும் பந்தலுக்கு மோட்டாரில் அழைத்து வரப்பட்டது. சுமார் 1000 பிரதிநிதிகளுக்கு மேல் பந்தலில் கூட்டம் கூடியிருந்தனர். சேலம் ஜில்லாவிலிருந்தும், கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்தும் எல்லாத் தாலூக்காக்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள் ஸ்ரீமான்கள் V. C. வெள்ளியங்கிரிக்கவுண்டர், V. C. பழனிச்சாமி கவுண்டர், சுப்பிணி கவுண்டர், ராமு ஜோடுட்டிக்கவுண்டர், கலியாணசுந்தரக்கவுண்டர், V. C. சுப்பையக் கவுண்டர், பருதாசலக்கவுண்டர் ஸ்ரீலஸ்ரீ பாணிக்க ஸ்வாமிகள், முதலிய கனவான்கள் கோயமுத்தூர் தாலூகாவிலிருந்தும், ஸ்ரீமான் P. R. ராமசாமி கவுண்டர், அவனாசி தாலூகாவிலிருந்தும், ஸ்ரீமான்கள் K. S. ராமஸ்வாமிக் கவுண்டர், K. R. ஈஸ்வரமூர்த்திக் கவுண்டர், வெங்கிட்டப்ப கவுண்டர், சப் ரிஜிஸ்ட்டிரார் செல்லப்ப கவுண்டர் முதலிய கனவான்கள் பல்லடம் தாலூகாவிலிருந்தும், ஸ்ரீமான் கள்ளிப்பட்டி மாரப்ப கவுண்டர் கோபி தாலூகாவிலிருந்தும், ஸ்ரீமான்கள் மண்டி பழனிவேலப்ப கவுண்டர் கிலாம்பாடி முத்துசாமிக் கவுண்டர், பூந்துறை மணியம் துரைசாமிக் கவுண்டர், விரண்மிண்டர் பாளையம் V. S. ராஜாக்கவுண்டர் முதலியவர்கள் ஈரோடு தாலூகாவிலிருந்தும், தென்கரை நாட்டுப்பட்டக்காரர் ஸ்ரீமான் வேணு உடையாரவர்கள் தாராபுரம் தாலூகாவிலிருந்தும், எரிசனம்பட்டி ஸ்ரீமான். பெரியண்ணக்கவுண்டர், பானுப்பட்டி ஸ்ரீமான் வேலுச்சாமி கவுண்டர், உடுமலை பேட்டை ஸ்ரீமான் செல்லமுத்துக்கவுண்டர், ஸ்ரீமான்கள் சிவசுப்ரமணியக் கவுண்டர், கந்தசாமி கவுண்டர் முதலிய கனவான்கள் உடுமலைப்பேட்டை தாலூகாவிலிருந்தும், ஸ்ரீமான்கள் காளியப்ப கவுண்டர் பெரியபோது ரங்கசாமிக் கவுண்டர், கோபாலசாமிக் கவுண்டர், வேட்டக்காரன்புதூர் பழனிச்சாமிக் கவுண்டர் P. ரத்தின சபாபதிக் கவுண்டர், ஆயிப்ப கவுண்டர் முதலிய கனவான்கள் பொள்ளாச்சி தாலூகாவிலிருந்தும், ஸ்ரீமான்கள் ஓலைப்பட்டிக் குபர வேலப்ப கவுண்டர். புதுப்பாளையம் ஜமீன்தார் ரத்தினசபாபதிக் கவுண்டர், செட்டியண்ணா கவுண்டர் முதலிய கனவான்கள் சேலம் ஜில்லாவிலிருந்தும், ஸ்ரீமான் பெரியசாமிக் கவுண்டர் B. A., B. L., வக்கீல்தார் சென்னையிலிருந்தும், விஜயம் செய்திருந்தனர். கொங்கு வேளாளர் மகாநாட்டிற்கு அடியிற்கண்ட பெரியோர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமான்கள் ஈரோடு ஈ. வே. ராமஸ்வாமி நாயக்கர், C ராஜகோபாலாச்சாரியார், C. V. வெங்கிட்டரமணையங்கார், T. A. ராமலிங்கம் செட்டியார், C. S. ரத்தின சபாபதி முதலியார், மகாலிங்கய்யர், V. சோமசுந்தரம் பிள்ளை, கைவல்ய சுவாமிகள் இக்கனவான்களும் விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் தேவார பாராயணம் நடந்தது. பின்னர்.

### ஸ்ரீமான் P. இரத்தின சபாபதிக் கவுண்டரவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கச் சுருக்கம்,

இது நமது கொங்கு வேளாளர் சங்கத்தின் மூன்றாவது மகாநாடு. கொங்கு வேளாளர் என்ற பெருங் குலத்தவர்களாகிய, நாம் வசிக்கும் நாடு; கொங்கு நாடு என்ற பிரதேசத்தின் காரணமாக இந்தப் பெயர் பெற்றோம். தொண்டை நாட்டிலே உள்ளவர்கள் தொண்டை மண்டல வேளாளர் என்றும், பாண்டிய நாட்டிலுள்ளவர்கள் பாண்டிய வேளாளர் என்றும், சோழ நாட்டவர்கள் சோழிய வேளாளர் என்றும், பெயர் பெற்றது போலவே, கொங்கு நாட்டில் உள்ளவர்களாகிய நாம் கொங்கு வேளாளர் என்று பெயர் பெற்றோம். கொங்கு நாடானது வடக்கே தலைமலை வரைக்கும், கிழக்கே குளித்தலை வரைக்கும், மேற்கே வெள்ளி மலைத்தொடர்கள் வரைக்கும் பரந்துள்ளது, என்று சொல்லுவார்கள். இதன் பெருமைகள் கொங்கு மண்டல சதகம் என்ற நூலில் பரக்கக்காணலாம். இந்நாட்டின் பூமிப் பரப்பு முழுதும் கொங்கு வேளாளர்களாகிய நமக்கே உரியது. இப்போதும் பெரும்பாலும் அவ்வுரிமை இருந்து வருகிறது. அதிகமாக விரிப்பானேன்; (உழுதுண்டு வாழ்வரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்) என்ற தெய்வப்புலவர் திருவாக்கு ஒன்று மட்டும் போதாதா? இப்பேர்ப்பட்ட நாம் இப்போதோ உலகத்திலே எல்லோரையும் தொழுது வாழும்படியான நிலைமைக்கு வந்துவிட்டோம். இந்த நிலைமைக்கு உள்ள காரணங்களை ஆராய்ந்து, அவற்றிற்கு நிவர்த்தி தேடிச் செய்வதற்காக நமது சங்கம் ஸ்தாபிக்கப்பெற்று, இப்போது மூன்று மகாநாடுகளும் கூடியிருக்கின்றன. சென்ற இரண்டு மகா நாடுகளிலும் இதற்காகப் பல தீர்மானங்களை நிறைவேற்றினார்கள், ஆனால் அவைகள் காகிதத்தளவிலே நின்றுவிட்டன என்று சொல்ல மிகவும் விசனமுள்ளவனாயிருக்கிறேன். நமக்குரிய பெருமைகளை நாம் அடையாமல் நம்மைக் கீழ் நிலையில் வைத்திருக்கும் காரணங்கள் பல: நாம் இப்போது கவனிக்கவேண்டிய காரணங்கள் பல இருந்தாலும் அவற்றில் முக்கியமானவை மூன்று. அவையாவன,;—நமது மரபினருக்குக் கல்வி பயில்விப்பதும், குடியையும், கொலையையும் ஒழித்தலுமே யாகும்.

கல்வியில்லாமையினாலே விளையும் கெடுதிகளை நான் சொல்லி நீங்கள் தெரியவேண்டியதில்லை. நமது மரபினர்கள் பெரும்பாலும் கையெழுத்துப் போடக் கூடத்தெரிந்து கொள்ளாததால் எத்தனை பொய்ப் பத்திரங்கள் சிருஷ்டிக்க ஆகின்றன. அல்லாமலும் வஞ்சகர்கள் கையிற் சிக்கி அநேக துன்பங்களையும் அடைகின்றார்கள்.

கள்ளும் கொலையும் நம்மை சீர்கேடான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது பாருங்கள். கொலையிற் சிறந்தது கொங்கு நாடு என்ற பட்டத்தை ராஜாங்கத்தாரிடம் நாம் பெற்றுவிட்டோம். கோர்ட்டு விவகாரத்திலோ நம்மைவிடப் பேர் போனவர்கள், இந்த நாட்டிலே வேறொருவருமில்லை, இரண்டு பூமிகள் பொழியிலே ஒரு ஒற்றைப்பனைமரம் நிற்குமேயானால், இரண்டொருப்பேருக அதன் மட்டைகளுக்காக நான்கு கொலைகள் நடக்கும். அதற்குப் பத்தாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். கடைசியில் அந்தப்பூமிக்கே ஆபத்துவரும். இவைகளுக்கெல்லாம் பரிகாரமான நடவடிக்கைகள் செய்யவேண்டும். சுருக்கமாக நான் சொல்லக்கூடியது சில வார்த்தைகள் தான். நாம் வசிக்கும் ஊர்கள் தோறும் குக்கிராமங்களானாலும், அங்கங்கே ஓர் பள்ளிக்கூடங்களை வைக்கச் செய்யுங்கள், அதற்கு நல்ல ஒழுக்கமுடைய உபாத்தியாயரையே நியமிக்கவேண்டும். அதற்கு முழுதும் நம்மவர்களாயிருக்கும் நமது தாலூக்கா போர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனப் பிரசிடெண்டுகள் வேண்டிய உதவி செய்வார்கள்.

கள்ளுக்கடை விவகாரத்திலும் கெடடைந்தவர்கள் நமது மரபினரைப்போல வேறொருவருமில்லை. நமது மரபினர்களிலே எவரும், கள்வியாபாரத்திலோ, கள்ளுக்கு மரம்கொடுப்பதிலோ, கள் குடியிலோ எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது என்னுடைய பிரார்த்தனை. கச்சேரிக்குப்போய்க் கெட்ட குடிகளுக்கோ கணக்கேயில்லை. ஆதிகாலத்திலே ஊர்கள் தோறும் கிராமப் பஞ்சாயத்துகள் இருந்தன. எல்லா விவகாரங்களும் அதிலே தீர்ந்தது. ஸ்டாம்பு இல்லை; அதற்கு வக்கீல செலவில்லை; தரகர்களில்லை; பொய் சாக்ஷி செலவில்லை; காப்பி ஓட்டல் செலவில்லை; இப்போது நமது ஊர்களில் அவ்விதமான பஞ்சாயத்துகளை ஏற்படுத்திக் கக்ஷிப்பிளவுகளுக்கு இடங்கொடுக்காமல் நமது விவகாரங்களை ஊரிலேயே தீர்த்துக்கொண்டோமேயானால் நாம் சுகமாக வாழலாம், நம்முடைய பட்டா பூமிகள் நம் வசமே யிருக்கும்; பட்டா மாறுதல் இருக்காது.

பெரியோர்களே!

என்து பேச்சு நீண்டுவிட்டது. 1 கல்வி, 2. குடி கொலை நீக்குதல் 3 பஞ்சாயத்து வைத்தல் ஆகிய மூன்று வழிகளையும் கையாட நடவடிக்கை நடத்தும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். மீண்டும் ஒரு முறை இந்த மகா நாட்டிற்கு உங்களை எல்லாம் மனமார்ந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். தமது பல வேலைகள் இடையே இம்மகா நாட்டின் தலைமை வகித்து நடத்திக்கொடுக்க அன்புடன் இசைந்த பாலி ஜமீன்தார் திருவாளர் சிங்கைய கவுண்டர் தலைமையின் கீழ் இம்மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெறும். அவர்களுடைய பெருங்குணங்களும் உதாரமும் பரோபகாரமும் மிகச்சிறந்தனவாகும். நமது ஜமீன்தார்கள், பட்டக்காரர்கள், மிட்டாதாரர்கள், பிரபுக்கள் முதலிய பெரியோர்களின் உதவியினாலும், ஒத்துழைப்பினாலும் இம்மகாநாடு சிறப்பாய் நடந்து நமது குலத்திற்குப்பெருமை கொடுப்பதாக, ஈசன் அருள் புரிவாராக.

வரவேற்புப் பிரசங்கம் முடிந்ததும் ஸ்ரீமான் P. ரத்தின சபாபதிக் கவுண்டரவர்கள் ஜமீன்தார் ஸ்ரீமான் சிங்கைய கவுண்டரவர்களை அக்கிராசனம் வகிக்கப் பிரேரேபித்தார். ஸ்ரீமான்களான V. C. வெள்ளியங்கிரி கவுண்டர், வக்கீல்தார் பெரியசாமிக் கவுண்டர் B. A., B.L., புதுப்பாளையம் ஜமீன்தார் ரத்தின சபாபதி கவுண்டர் முதலிய கனவான்கள் ஆமோதித்தும் ஆதரித்தும் ஸ்ரீமான் சிங்கைய கவுண்டருடைய பொது நல ஊழியத்தை சிலாகித்துப் பேசினார்கள். அதன் பிறகு ஸ்ரீமான் சிங்கைய கவுண்டரவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே அவைத் தலைமை வகித்து, தமது முன்னுரைப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். அவரது பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

---

## அக்கிராசனப் பிரசங்க சுருக்கம்,

---

அன்பர்களே!

ஆற்றலிலும் அனுபவத்திலும் என்னைக்காட்டிலும் சிறந்த பலபேர் நம்முடைய மரபிலிருந்தும், என்னை இந்த மகா நாட்டிற்குத் தலைவனாக்கிப் பெருமைப்படுத்தின உங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

சகோதரர்களே இந்தக் கூட்டமானது ஒரு ராஜீய மகா நாடு அல்ல. இது ஜாதீயக் கூட்டம், ஆகையால் நான் அரசியல் சம்பந்தமாக ஒன்றும் பேசப் போவதில்லை. நாம் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களைச் சிறிதும் கவனிக்காமல் ராஜாங்கத்தின் மேல் குறை கூறிக்கொண்டிருப்பதில் என்ன பலன்? ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஒழுக்கத்தைச் சீர்படுத்தி ஒவ்வொரு குடும்பமும் தன்னுடைய கௌரவத்தைக் காத்து, ஒவ்வொரு ஜாதியும் தன்னுடைய பொறுப்பைப் போற்றுமானால் இராஜாங்கம் தானாகவே சீர்ப்பட்டுவிடும். ஆகையினால் நம்முள் நேசித்து வாழக்கூடிய அன்பைப் பெருக்குவதே இந்த மகா நாட்டின் நோக்கம்.

உலகத்திலே மனிதனுக்கு முக்கியமானவை உண்பதும் உடுப்பதுமே. உணவுக்கு ஆதாரம் உழவுத்தொழில். உடைக்கு ஆதாரம் நூற்பதும், நெய்தலும், உழவுதொழிலும் நெய்யுந்தொழிலுமே மிகவும் உத்தமமான ஜீவனங்கள் என்பது உலகம் ஒப்புக்கொள்ளும் உண்மை; அதிலும் உழவுத்தொழிலைக் காட்டிலும் உயர்ந்த தொழில் இல்லை. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர். அப்படிப்பட்ட பாவமற்ற தொழிலைச் செய்பவர் நம்முடைய ஜாதியார். வேளாளன் என்ற சொல்லுக்கே உழுது பயிர் செய்து மற்றவர்களுக்கு உணவு கொடுப்பவன் என்று அர்த்தம். அத்துடன் இதற்கு அடுத்தாப்போல் அவசியமான நெசவுத் தொழிலில் பருத்தி வேலையான நூற்கும் வேலையை நம்முடைய ஜாதியார் ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செய்து வந்தவர்கள். இனி எண்ணிப்பாருங்கள், உலகத்தில் உயர்ந்த தொழிலாகிய உழவுத்தொழிலுக்கு உரியவர்களாகி, உடை கொடுக்கும் வேலைக்கு உதவியாக நின்று மற்ற வகுப்பார்களுக்கெல்லாம் ஊட்டி உடை கொடுத்த இத்தமிழ் நாட்டின் பெரும் பகுதியையும் ஏகாங்காணியாய் அனுபவித்து பாப புண்ணியங்களுக்கு மிகவும் பயந்து தான தருமங்களிற் சிறந்து விளங்கிய இந்தச் ஜாதியார் இப்போது உணவும் உடையும் அற்று, கூலிக்கும் வேலை கிடைக்காமல் நாடோடிகளாக் கண்டி, பினாங்கு, சிங்கப்பூர் முதலான இடங்களில் பரதேசிகளாக அலையும் கோலத்தை அண்ணன்மார்களே, எண்ணிப்பாருங்கள். கூடுமான வரையில் பாடுபட்டு அந்த அனுதைகளுக்குக் கால் வயிற்றுக் கஞ்சியாவது, கௌரவமாகக் கிடைக்கும்படியான ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியாதா என்பதுதான். இந்த மகாநாட்டின் முக்கிய அலுவலாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி எனக்கெட்டிய யோசனையையும் சொல்லுகிறேன். முதலாவது, நாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு வரவேண்டும். கட்டுப்பாடு என்றால் இஷ்டமான கட்டுமானத்தை ஏற்படுத்தி வருத்துவது அல்ல. அதாவது நம்முடைய பெண்டுகள் பட்டணக்கரைக்குப் பால் தயிர் விற்கப் போகக் கூடாதென்றும் கூலி வேலைக்குப் போகக் கூடாதென்றும் அநேக இடங்களில் கட்டுக் கட்டினது உங்களுக்கு ஞாபகமிருக்கும். அந்தக்கட்டு வெளிக்கு நல்ல கட்டாகத் தோன்றினாலும், காரியத்தில் செய்ய முடியாத கட்டாகப் போய் விட்டது. ஏனென்றால் பால் தயிர் விற்பதையும், கூலிக்குப் பட்டணக்கரைகளுக்குப் போவதையும் தவிர வேறு ஜீவனத்திற்கு வழியில்லாதவர்களுக்கு வேறு வழி தேடிக்கொடுக்காமல், அதைச்செய்யக்கூடாது; இதைச் செய்யக்கூடாது; என்று அதிகார மட்டிலும் செய்வது அழகா? நியாயமா? அல்லாமலும், பட்டணக்கரைகளுக்குப் பக்குவமடைந்து கலியாணமாகாத பெண்களோ அல்லது இத்தனை வயதுக்குட்பட்ட பெண்களோ போகக்கூடாதென்று கட்டியிருந்தால் அது கொஞ்சமாவது நடந்திருக்கும். அதை விட்டுப் பெண்கள் யாருமே போகக்கூடாதென்று அர்த்தமில்லாமல் கட்டியதால் பலனற்றுப் போய்விட்டது. ஆகையால் அவர்கள் தாங்கக்கூடிய ஒரு கட்டை ஏற்படுத்தவேண்டும். அது எப்படி யென்றால் உடனே நம்முடைய மரபிற்கு மன்னர் போல் விளங்கும் பழய கோட்டை முதலான பட்டக்காரர்களுடைய ஆதரவின் கீழ் மிக்க பொறுப்பும், உழைப்பும் உள்ள ஐந்துபேர் அல்லது ஏழுபேர் அடங்கிய ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தவேண்டும். தகுந்த இடத்தில் இதற்கு ஒரு காரியாலயமும் ஏற்படுத்தி செலவுக்கு இப்போது கொஞ்சமாக ஒருவரியை ஏற்படுத்தி, வசூல் செய்வது ஆகிய இவைகள் முதலில் செய்யவேண்டிய வேலைகள். இந்தப் பஞ்சாயத்தாரும் காரியாலயமும் இந்த இனத்தவர்கள் யாருக்கு என்ன குறையேற்பட்டாலும் அதைக் கவனிக்கவேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

### கிராமப் பஞ்சாயத்து

பஞ்சாயத்துக்கு கிராமங்களில் அங்கங்கே ஒவ்வொரு ஜாதிப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டும். அதன் வேலை உள்ளூரில் வரிவட்டங்களில் தகராறில்லாமல் பார்த்துக் கொள்ளுவதுடன் நம்மினத்தவர்களுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளை சமாதானப்படுத்தி கச்சேரி விவகாரங்கள் இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

### கல்வி.

நம்முடைய ஜாதியில் கல்வி மிகவும் குறைவாக இருப்பது மானக்கேடான விஷயம். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், நூற்றுக்கு ஒருவர் கூட இல்லாதிருப்

பது இழிவல்லவா? ஒவ்வொரு தாய் தந்தையரும் தங்களுடைய பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டிய விஷயத்தில் மிகவும் கவலை கொள்ளவேண்டியதுடன் நம்முடைய ஜாதிக்கென்று பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் ஏற்படுத்த முயலவேண்டும். இதற்காக வருஷா வருஷம் ஏருக்கு அரை ரூபாய் அல்லது ஒரு ரூபாயென்று வசூலித்தாலும் லக்ஷக்கணக்கான தொகை கிடைக்கும். கொங்கு மண்டலத்திற்குள் தகுந்த இடத்தில் ஒரு கலாசாலையை ஏற்படுத்தி அதை இந்தக்காலத்துக்கு வேண்டிய முறையில் மற்றப் பள்ளிக்கூடங்களுக்கு ஒப்பஅமைத்து அங்கே பெரும்பாலும் கொங்கு வேளாளப்பிள்ளைகளும் சமயோசிதம் போல் மற்றப் பிள்ளைகளும் தங்கி கல்வி பயிலும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நம்முடைய பெண் மக்களுக்கும், கல்வியறிவு பரவும்படி முயற்சி செய்யவேண்டும். நம்மில் பலபேர் பெண் மக்கள் படிப்பதே கூடாது என எண்ணுகிறார்கள். அன்பர்களே! இது மிகவும் தப்பான எண்ணம். படிப்பினால் யாருக்கும் எப்பொழுதும் கெடுதி ஏற்பட்டதே கிடையாது. ஆனால் யாருக்கு எந்தெந்தப்படிப்பு பலனுள்ளதாகும்; எந்தெந்த முறையால் அவர்களுக்குப் போதிக்கவேண்டும், என்ற விஷயங்களை மட்டும் நன்றாக்கவனிக்கவேண்டும. யாருக்கு எந்த வாழ்க்கை ஏற்படக்கூடுமோ அந்த வாழ்க்கையான படிப்பைப் புகட்டவேண்டும். அன்றியும் ஆணுக்கோ பெண்ணுக்கோ, அவர்களுடைய நடத்தையைச் சீர்படுத்தி குணங்களை உயர்த்தக்கூடிய படிப்பில் நாம் கவனம் செலுத்தவேண்டும், தங்களுடைய இயற்கைக்கும் இனத்திற்கும் முற்றும் மாறான பழக்க வழக்கங்களைத் தரக்கூடிய படிப்பைப் படித்துவிட்டுப் பலபேர் தங்களுடைய இனத்தாருக்கு ஏதும் பயனற்றவர்களாக இருப்பதை நாம் பார்த்து வருகிறோம், ஆதலால் அத்தகைய படிப்பு கூடவே கூடாது. மேல் நாட்டுப் படிப்பை இகழ்ந்து பேசவேண்டுமென்பது என்னுடைய எண்ணமல்ல. மேல் நாட்டு முறை மேல் நாட்டாருக்கு நல்லதாக இருக்கலாம். அது நம்முடைய நாட்டிற்குப் பொருந்தாது. மேல் நாட்டுப் பெண்மணிகள் ஆண் மக்களைப்போலவே அவர்களுடன் பாடசாலைகளிற்படித்து அந்தப் படிப்பைக்கொண்டு ஆண் மக்கள் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் தாங்களும் செய்ய உரிமை உடையவர்கள் என்ற எண்ணமுடையவர்கள். ஆனால் நம்முடைய எண்ணம் அப்படியல்ல, ஆண் மக்களின் அலுவல்கள் வேறு; பெண் மக்கள் வேலைகள் வேறு என்பது நம்முடைய கொள்கை. வெளியே போய் ஓடியாடி சம்பாதித்துக் குடும்பத்தையும், தேசத்தையும் காத்து ஆளவேண்டியது ஆண் பிள்ளையின் கடமை என்றும், வீட்டு வேலைகளைக் கவனித்து விருந்தினர்களை உபசரித்து, மக்களைப்பெற்று, அவர்களை நல்ல மார்க்கத்தில் பழக்கி, கணவனுக்கு அடங்கிக் குடித்தனத்தைப் பாதுகாப்பதே பெண் மக்கள் கடமை என்பதும் நம்முடைய பழக்கம். இதுவே இயற்கைக்குப் பொருத்தமானது. ஏனெனில் ஆணென்றும் பெண்ணென்றும் வேறு வேறு காரியங்களுக்காகவே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இந்த வித்தியாசத்தை நம்மால் மாற்ற முடியாது. ஆகையால் நாம் ஏற்படுத்தும் பாடசாலைகளில் இதை மிகவும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

## மதுவிலக்கு

மதுவிலக்கைப்பற்றி புதிதாகச் சொல்லவேண்டியது ஒன்றும் இல்லை. மதுபானத்தால் நம்முடைய ஜாதியார் கெட்டுப்போனதுபோல் மற்றெவரும் கெடவில்லை. எல்லாக் குற்றங்களுக்கும் ஆதாரமான இந்தப் பாதகத்தை ஒழிக்கவேண்டுமென்று நம்முடைய நாட்டில் சென்ற நாலைந்து வருஷங்களாக நடந்து வரும் கிளர்ச்சிக்கு அளவேயில்லை. அப்படியிருந்தும் அது இன்னும் கைகூடவில்லை. இதற்குப் பெரும்பாலும் நம்முடைய ஜாதியில் தலைவர்களாக இருப்பவர்களுடைய கவனக்குறைவே காரணம். கொஞ்சம் பணக்காரர்களாக இருப்பவர்களெல்லாம் கள்ளு சாராயக்கடைகளை ஏலம் எடுக்காமலும், மரங்களைக் கள்ளுக்கு விடாமலும், இருந்து ஏழை ஜனங்களுக்கு உண்மையாகவும் ஹிருதய பூர்வமாகவும் சொல்லுவார்களானால் லக்ஷக்கணக்கான குடும்பங்களைத் தப்புவிக்கலாம்.

## கைராட்டினம்—கதர்.

சகோதரர்களே! கைராட்டினத்தைப்பற்றியும் கதராடையைப்பற்றியும்சொல்ல வேண்டுமா கைராட்டினத்திற்கு உரிமையானவர்கள் நம்முடைய இனத்தவரே என்று சொல்லலாம். எப்படியென்றால் நம்மில் பெரும்பாலாரும விவசாயக்காரர்களே. விவசாயம் செய்கிறவர்கள் நல்ல மழையுள்ள காலங்களிலும கூட மூன்று நான்கு மாதத்திற்கு வேலையில்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்த நாலுமாதத்தையும் இவர்கள் வீணேகாலம் போக்காமல் பஞ்சுகொட்டி நூல் நூற்றால் தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய துணிகளையும் அதற்கு மேலும் சம்பாதிப்பார்கள். இதையறிந்தே நமது முன்னோர்கள் கல்யாண காலங்களில் பெண்ணுக்குக் கொடுக்கும் ஸ்ரீதனத்தில் ராட்டினத்தை முதன்மையாக வைத்திருப்பதையும், காலகதியால் ஒரு பெண் கணவனை இழந்துவிட நேர்ந்தால் அவர்களுக்கு, இனி உன் பிழைப்புக்கு இதைவிட கண்ணியமான வழியில்லை என்று சொல்வதுபோல் பஞ்சுகொடுக்கும் சடங்கை ஏற்படுத்தியிருப்பதையும் கவனித்தால், கைராட்டினத்தின் அவசியத்தைக் காட்டுவதற்கு வேறு கணக்குகளும் வேண்டுமா? கைராட்டினத்தை நாம் காப்பாற்றியிருந்தால் நம்மால் இவ்வளவு ஜனங்கள் கண்டிக்குஓடியிருக்கமாட்டார்கள். நமக்குள் இவ்வளவு தரித்திரமும் தலையெடுத்திருக்காது நல்ல வேளையாகக் காந்தியடிகள் நமக்கு ஞாபகப்படுத்தினர். இனிமேலாவது நமது முன்னோர்கள் வீட்டுத் தெய்வத்தைப்போல் தொழுது வந்த சுகங்கண்ட இந்த ராட்டினத்தை நாமும் போற்றுவோம். அல்லாமல் கதரைத்தான் கட்டுவோம் என்ற உறுதி நமக்கு வந்தாலொழிய இந்தத்தொழில் முன்னுக்கு வராது. கட்டுவாரில்லாமல் நூற்றும்பயனென்ன? ஏராளமான கதர்த்துணிகள் வெகு சரசமான விலைக்குத் தயாராகி வாங்குவாரின்றிக்கிடக்கின்றன. ஆகையினால் இக்கதர் ஆடையின்றி வேறுகட்ட மாட்டோம் என்று இன்றே நீங்கள் ஒவ்வொருவரும் விரதம் கொள்ளவேண்டும்.

நம்முடைய நாட்டில் ஜாதித்துவேஷமும், வகுப்புச்சண்டைகளும் அதிகமாகிவிட்டன. பிராமணனென்றும் பிராமணனல்லாதவனென்றும் மிக்க மனக்கசப்புடன் நடந்துவரும் சச்சரவுகளில் நம்முடைய சமூகம் சிறிதும் கலந்துகொள்ளக் கூடாது. ஒரு ஜாதியில் பிறந்ததினால் மட்டும் உயர்வு என்ற காலம் போய்விட்டது. எந்த ஜாதியில் பிறந்தவனாயிருந்தபோதிலும் அவனவனுடைய நடத்தையும் நல்ல எண்ணத்தையுமட்டும் நாம் கவனிக்கவேண்டுமேயன்றி வேறில்லை.

## முடிவுரை.

இவைகளை ஒவ்வொன்றாக அமுலுக்குக்கொண்டுவரவேண்டிய ஒழுங்கான ஏற்பாடுகள் செய்து நன்மை பெற ஈசன் அருள்புரியவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டுகாரியங்களைத் துவக்குகிறேன்.

அக்கிராசனப் பிரசங்கம் முடிந்ததும் மகாநாட்டிற்கு வரக்கூடாமற்போன அடியிற்கண்ட கனவான்களின் தந்திகள் வாசிக்கப்பட்டன, அதாவது, பழையகோட்டைப் பட்டக்காரர் ராய்பஹதூர் ஸ்ரீமான் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார், காடையூர் பட்டக்கார் ஸ்ரீமான் இம்முடிக் குமாரகாங்கேய மன்றாடியார், பழனி ஸ்ரீமான் மங்கல கவுண்டர், ஐயம்பாளையம் ராஜாக் கவுண்டர், கோயமுத்தூர் ஸ்ரீமான் M. சம்பந்த முதலியார், ஸ்ரீமான் வக்கீல்தார் C. K. சுப்ரமண்ய முதலியார் B. A. இவர்கள் தந்திகொடுத்திருந்தனர்.

அதற்குப்பின் விஷயாலோசனைக்கமிட்டிக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதும் ஸ்ரீமான் C. ராஜகோபாலாச் சாரியாரவர்கள் (கதர்) என்ற விஷயத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் புரிந்தார்.

---

## ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியாரவர்ககள் உபந்நியாசச் சுருக்கம்.

---

சபாநாயகரவர்களே, சபையோர்களே!

இப்பொழுது சபையினுடைய காரியம் ஒருகமிட்டி ஏற்பாடுசெய்வது. ஆனால் அக்கமிட்டி தேர்ந்தெடுக்க சற்று நேரமாகுமாதலால் இடையில் என்னை பேச அனுமதி கொடுத்திருக்கிறார்கள். நான் மகாநாட்டுக்கு வந்தது, மகாநாட்டு நடவடிக்கைகள் பூராவையும் பார்த்திருந்து கடைசியாக என்து அபிப்ராயத்தையும் உங்கள் மத்தியில் சொல்லிப் போகலாமென வந்தேன். மகாநாடு முடியுமுன் என்ன சொல்லப்போகிறேன். வரவேற்புப் பிரசங்கத்திலும் அக்கிராசனப் பிரசங்கத்திலும் ஒற்றுமையைப்

பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் வரவேற்புத் தலைவர் தமது பிரசங்கத்தில் சொல்லாமல் விட்டுவிட்ட விஷயத்தை அக்கிராசனர் சொல்லிவிட்டார். வரவேற்புத் தலைவர் அதை ஏன் சொல்லவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதுதான் கதர்.

ராட்டை என்பது ஒரு சந்நியாசி, ஆண்டி எடுத்த விஷயமல்ல. உங்கள் குலத்தை உத்தாரணம் செய்ய காந்தியடிகள் எடுத்த விஷயமென்று நினைக்கிறேன். அவர் உங்கள் ஜாதியல்ல; அவர் வடநாட்டில் வணிக குலத்திலுதித்தவர். ஆனாலும் அவர் சொன்னது உங்கள் குலத்திற்கே என்று சொல்லலாம். ஆனையால் தான் அது கொங்கு நாட்டில் முளைத்திருக்கிறது. 8 லக்ஷ ரூபாய்க்குக் கொங்கு நாட்டில் கதர் உற்பத்தி செய்தவர்கள் நீங்கள். அதில் 2 லக்ஷ ரூபாய் உங்கள் ஸ்திரீகள் பெற்றிருக்கிறார்கள். உங்கள் கொங்கு நாட்டிலுள்ள நெசவு தொழிலாளிகள் 2 லக்ஷ ரூபாய் பெற்றிருக்கிறார்கள். பாக்கியுள்ளதை பஞ்சுக்கார வேளாள குலத்தினர் பெற்றிருக்கின்றனர் இந்த மாதிரி 8 லக்ஷம் பிரிவினையாயிருக்கிறது. கதர் விர்த்தியை உங்கள் தலைவர்கள் உங்களுக்கு ஞாபகப்படுத்தியிருக்கவேண்டியது தர்மம். இல்லாததால் காந்தியடிகள் ஞாபகப்படுத்தியதை நீங்கள் காப்பாற்றவேண்டும். நாம் இதை விர்த்தி செய்தால் கோடிக்கணக்கான ரூபாய்கள் நமது நாட்டிற்கே உபயோகப்படும். இதில் ராஜாங்க விஷயம் ஒன்றுமில்லை. இது ஒரு பித்தன் சொன்ன விஷயமல்ல; வெறும் பேச்சுமல்ல. வயிற்றுப்பேச்சு, குலத்துப்பேச்சு. ஸ்ரீமான் ரத்தின சபாபதிக் கவுண்டரவர்கள் வீட்டுக் கலியாணத்தில் தட்டத்தில் அரிசியிட்டு கதிர் நூல் சுற்றிவைத்திருந்ததை நான் பார்த்தேன். அதில் அநேக அர்த்தமிருக்கிறதையும் கேட்டுத் தெரிந்தேன். ராட்டையை வைத்துப் பூஜை செய்வதில் பலனில்லை; நூற்கவேண்டும்; கதர் கட்டவேண்டும். நீங்களே கதருடுத்தாமல் உங்கள் தொழிலுக்கு எப்படி மதிப்புக்கிடைக்கும். நீங்கள் சீமை அரிசியை வாங்கிச்சாப்பிட்டால் உங்கள் அரிசியை யார் வாங்குவார்கள்? உங்கள் பெண்களுக்குத் தொழில் கொடுக்க நீங்கள் கதர் கட்டாவிட்டால் தொழிலற்று ஜனங்கள் கண்டி பினாங்கு ஓடாமல் என் செய்வார்கள். ஏதோ ஒரு தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அக்கிராசனர் சொன்னபடி முதலில் கதரைச் செய்யுங்கள். இம்மகா நாட்டுக்கு வந்திருக்கும் உங்கள் குலத்தினர் போர்டு போட்ட மாதிரி இன்னும் அன்னியத்துணி போட்டு வந்திருக்கிறார்கள். கதரின் அவசியத்தை யார் சொல்லுகிறார்? உலகமே யோக்கியர் என்று போற்றும் மகாத்மா காந்தி சொல்லுகிறார், காந்தி பேச்சுக்கு மதிப்புக்கொடுங்கள். 100-க்கு 100 பேரே கதர் கட்ட முற்படுங்கள். நன்றி கொன்ற மாதிரி உங்கள் குலப்பெண்களின் ராட்டினத்திற்கு நீங்கள் ஆதரவளிக்காமலிருந்தால் என் செய்வது? விவசாயத்திற்கு சிலவிடும் காலம் போக பாக்கி 4 மாதங்களைக் கதர் நூல் நூற்பதற்கு உபயோகப்படுத்துங்கள்.

## மது விலக்கு,

10 ரூபாயிருந்தால் 4 ரூபாய் கள்ளுக்கடைக்குக்கொடுத்துவிட்டால் பாக்கி என்ன இருக்கிறது, உங்களில் பெரிய மனிதர்களே மதுவைக் குடிக்கின்றனர். மறைத்து வைப்பதில் பலனில்லை. நீங்கள் மரத்தின் லாபத்திற்காக மது உற்பத்திக்கு உடன்படாமலிருக்க வேண்டுகிறேன். குடத்தில் தண்ணீர் ஊற்றி அடியில் ஓட்டை விட்டால் குடத்தில் தண்ணீர் தங்காது; அதுபோல் நீங்கள் மதுவை வைத்துக்கொண்டிருந்தால் உங்கள் குலம் முன்னேற்ற முடியாது. சோள நாட்டிலுள்ள உங்கள் குலத்தவரை வந்து பாருங்கள், அங்கே உங்கள் குல சகோதரர்கள் மிகவும் பரிசுத்தவான்களாயிருக்கின்றனர், மதுவை பொழிக்க நீங்களும் உங்கள் தலைவர்களும் முயற்சி செய்யவேண்டும். இனி ஜாதிபெருமையை ஒருவருக்கொருவர் பாராட்டிக்கொள்ளக்கூடாது. சமத்துவமாயிருக்கவேண்டும். உங்கள் தொழிலுக்கு சகல வேலைக்கும் உதவியாயிருக்கும் பஞ்சமர்களுக்கு நீங்கள் தண்ணீர் வசதி தேடிக்கொடுக்கவேண்டும். நீங்கள் அவர்களுக்கு வசதி தேடிக்கொடுத்தால் கடவுள் உங்களுக்கு வசதி தேடிக்கொடுப்பார். கடவுள் கிருபையால் உங்கள் மகா-நாட்டுக்கு நல்ல பலனுண்டாகப் பிரார்த்திக்கிறேன். என்று பேசி முடித்தார்.

கல்விப்பிவிர்த்தி, வித்யார்த்தி விடுதி, என்னும் விஷயத்தை பொள்ளாச்சி ஆசிரியர் ஸ்ரீமான். வெங்கிட்டராவ் அவர்கள் பேசினார். அதன் பின்னர் தர்ம பரிபாலன இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான். T. R. பாலசுந்திரம் பிள்ளையவர்கள் (தர்மஸ்தாபனங்கள்) என்ற விஷயத்தை அழகிய செந்தமிழில் சுருக்கமாக ஓர் உபந்நியாசம் புரிந்தார். அவர் இந்து மதத்தின் மேன்மை, தாய்ப் பாஷையை வளர்க்கவேண்டிய அவசியம், கடவுளைப்பற்றி இந்துக்களுக்கிருந்த நம்பிக்கை, தேவாலயங்கள் முன்னிருந்த நிலை, இப்போது இருக்கும் நிலை, ஆலயங்களையும் தர்ம ஸ்தாபனங்களையும் மீண்டும் நன்னிலமைக்குக் கொண்டுவர சென்னை சட்டசபையாரால் நிறைவேற்றப்பட்ட தர்ம பரிபாலன மசோதாவின் பலன், அதை கிராமங்கள்தோறும் அமுலுக்குக் கொண்டுவர, கொங்கு வேளாளப் பிரபுக்கள் காட்டவேண்டிய ஆதரவு இவைகளைபபற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். இவர்

ஆற்றரு நோய்மிக்க வனிமழையின்றி
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான்திருக்கோயில் களானவி
சாற்றிய பூஜைகள் தப்பிடிற்றுனே.

என்ற திருமூலர் வாக்கியத்தைக் குறிப்பிட்டுக் காட்டியது கடைசியாக மிக்க பொருத்தமாகவிருக்கிறது. அதன் பின்னர்

ஈரோடு. ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் கதர் என்ற விஷயத்தைப் பற்றிப் பின்வருமாறு பேசினார்:—

சபா நாயகரவர்களே, சபையோர்களே!

இந்த மகாநாட்டில் எனக்குமுன் பேசியவர்கள் ஒவ்வொவரும் முக்கியமாக கதர், மதுவிலக்கு, தீண்டாமை என மூன்று விஷயங்களைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஏதோ என் மனதிலுள்ள சில விஷயங்களைச் சொல்ல அனுமதி கொடுத்ததால் சொல்லுகிறேன்.

கொங்கு வேளாள குலத்தினர் இத்துடன் மூன்று மகாநாடு கூடியாகிவிட்டது. சற்று உணர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. மகாநாட்டிற்கு வேளாள சமூகத்தினர் திருவிழாவுக்கு வருவதுபோல் எண்ணி வருகிறார்கள். காப்பியும் சாப்பாடும் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். இந்த சமூகத்தார்களிருக்கும் நிலைமைக்கு, இச்சங்கம் இந்த வேலை செய்தது போதியதல்ல. இச்சமூகத்தின் கஷ்டந்தான் நாட்டின் கஷ்டமாகும். இச்சமூகத்தின் முன்னேற்றந்தான் நாட்டின் முன்னேற்றமாகும். கதரும் மதுவிலக்கும் உங்கள் சமூகத்தினர் செய்யாதது பெருங்குறை. உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான். P. ரத்தின சபாபதிக் கவுண்டர் கதரைப் பற்றித் தமது பிரசங்கத்தில் குறிப்பிடவில்லையென்று ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரவர்கள் குறிப்பட்டார். அதின் காரணம் வேறொன்றுமில்லை. அவர் கதர் கட்டவில்லை; ஆதலால் அவர் குறிப்பிடவுமில்லை. கதரை மனிதன் கட்டினாலும் மரங்கட்டினாலும் யார்கட்டினாலும் அதன்பலனை, நீங்கள்தான் அடைகிறீர்கள். பஞ்சமென்று சொல்லுவது வியாபாரிக்கல்ல, வக்கீலுக்கல்ல, உத்தியோகஸ்தனுக்கல்ல, பஞ்சத்தால் குடிக்கக்கூட தண்ணீர் இல்லையென்றால் யாருக்கில்லை? குடியானவர்களுக்குத் தானில்லை. ஆகையால் பஞ்சம் என்றால் குடியானவர்களுக்குத்தான் என்று கருதவேண்டும். பஞ்சம் வரக்காரணம் விளையாமையினாலல்ல; பணமில்லாமையினாலல்ல, முன்காலத்தைவிடத்தற்காலம் ஊர் நத்தம், மலை,புறம்போக்கு எல்லாம் விளைவு செய்யப்படுகிறது. விளைவும் குறைந்ததாகக் காணோம். தானியங்கள் பருத்தி மிளகாய் நிலக்கடலை தானியம் முதலிய சரக்குகள் எல்லாம் தற்காலத்தில் முன்னைவிட [illegible] நாலு பாகம் அதிக விலைக்கே விற்கப்படுகிறது. எத்தனை பணம் வந்தாலும் நம்நாட்டில் பணம் தங்க மார்க்கமில்லாமல் போயிற்று. பண்டம் மாற்றிக்கொண்டு பணமில்லாமலே அக்காலத்தில் பஞ்சமின்றிப்பிழைத்தோம். கொஞ்சம் பணம் வந்தாலும் புதைத்துவைப்போம். அக்காலத்தில் பஞ்சமில்லை. இத்தனை பணம் வந்தாலும் இக்காலத்தில் எவ்வளவு பெரிய குடும்பமாயிருந்தாலும், கலியாணம் வந்தாலும், இழவு வந்தாலும் நாட்டுக் கோட்டையாரிடந்தான் போகவேண்டி வந்துவிட்டது. அநேக குடும்பங்கள் இன்சால்வெண்டு விண்ணப்பம் போட வேண்டியதாய்த் தானிருக்கிறது. சாதாரணக் குடியானவர்கள் நிலை எப்படி இருக்கிறதென்று யோசித்துப்பாருங்கள். பட்டணங்களு

க்கு வந்து பால், விறகு, விற்றுப் பிழைக்க வேண்டியிருக்கிறது, இவ்வளவு பஞ்சம் வரக்காரணம், வேலையில்லை. தொழிலையெல்லாம் மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டோம், ஆகையால் நம் நாட்டு ஏழை மக்கள் வெளிநாட்டுக்குப் போவதைத் தடுக்க முடியவில்லை. காங்கய நாட்டில் ஏழைக் குடியானவர்கள் கட்டில்,சட்டி பானையுடன் பஞ்சத்தால் வெளிநாடு செல்வதைக்கண்டு விசனமடைந்தேன். அவர்கள் வெளிநாடு சேருமுன் காலரா பெருவயிறு இவைகளால் கஷ்டப்பட்டு அநேகர் மாண்டும் போயினர். இந்தப் பஞ்சம் நமக்கு எது வந்தாலும் தீராது. சர்க்கார் உத்தியோகம் வந்தாலும் தீராது. சர்க்கார் கொடுக்கும் சுயராஜ்யம் வந்தாலும் தீராது. எந்த நிலை நமக்கு நன்மை, எந்த நிலை நமக்குத் தீமை,என்பதை கவனிக்கவேண்டும்? அவரவர்கள் கையிலேயே தொழிலிருக்கிறது. ராட்டினம் ஒன்று நம்மை விட்டுப் போனதும், அநேகர் பணத்தை நாம் இழக்க நேரிட்டது. மிஷின்கள் வந்தபின்னே தான் நமக்கு பங்கம் வந்தது. ஒரு நெல்லு மூட்டை குத்தினால் இரு குடும்பம் ஒரு நாள் வயிறார சாப்பிட ஏழைகளுக்கு வழியிருந்தது. இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு சாப்பாடு கிடைத்து வந்தது. இப்போது ஆயிரக்கணக்கான ஏழைகளின் வாயில் மண்ணைப்போட்டு விட்டு நெல் மிஷன் என்ற பிசாசு அந்த லாபத்தை கொண்டுபோய் விடுகிறது. பருத்தி நூல் மிஷன்களும் அப்படியே தான். ஒரு நாள் 1-க்கு 40 ஆயிரம் பேர் நூற்கும் நூலை ஒரு மிஷன் நூற்றுவிடுகிறது. அந்த கூலி 40 ஆயிரம் குடும்பத்தை பட்டினி போட்டுவிட்டு முதலாளிகளுக்குத்தான் போய்ச் சேருகிறது. இதில் சில நூற்றுக்கணக்கான கூலிகளுக்குத்தான் கூலி கிடைக்கிறது. ஆகையால் ஒரு மிஷன், முதலாளிக்கு லாபத்தையும் சில பேருக்கு சொற்பகூலியையும் கொடுத்துவிட்டு,ஒரு நாள் 1-க்கு 40 ஆயிரம் ஏழைகள் வாயில் மண்ணைப்போடுகிறது. 3 ராத்தல் பஞ்சு எடையுள்ள ஒரு மல் பீசில் 1-4-0 ரூபாய் பஞ்சுக்கு விலை நமக்குக் கிடைக்கிறது. பாக்கி பீஸ் 1-க்கு 13—12—0 ரூபாய் அந்நிய நாடு போய்விடுகிறது. அந்த 13—12—0 ரூபாயை நம் நாட்டில் நிறுத்தவேண்டும். காங்கயம் பிர்க்காவில பஞ்ச நிவாரண வேலை செய்ததாக சிலர் பெயர் பெற்றுக் கொண்டார்கள். அது சரியான நிவாரண வேலையென்று சொல்ல முடியாது. உண்மையில் பஞ்ச நிவாரண வேலை செய்தது மகாத்மா காந்திதான் திருப்பூர் காங்கயம் பக்கம் பஞ்சத்தில் வாடிய ஏழைகளை அரைக்கஞ்சியாவது ஊற்றிக் காப்பாற்றியது கை ராட்டினம் தான். அதனால் தான் மகாத்மா மில் தொழிலை ஆதரிக்கவில்லை. கதர் கொஞ்சம் விலை அதிகமாயிருந்தாலும், கொஞ்ச காலம் பொறுத்துக்கொள்ள வேண்டியது தான். டிராமா காப்பி பீடி வக்கீல் இவைகளுக்கு செலவாவதில் கதருக்கு கொஞ்சம் உபயோகிக்கலாம். ஆகையால் நாம் விட்டுவிட்ட தொழிலை மீண்டும் கொள்ளவேண்டும். போய்விட்ட யோக்கியதையை சம்பாதிக்காதவர்கள் எப்படி புது யோக்கியதையை சம்பாதிக்கப் போகிறீர்கள்? குடியைப்பற்றிக் கூட எனக்கு முதலில் அவ்வளவு கவலையில்லை. கதரைக் கட்டுங்கள்; குடியைவிட கதர் பிரதானமானது என்று தான் சொல்லுவேன், என்று பேசி முடித்தார். அதன் பின் சிற்றுண்டிக்காக மகா நாடு கலைந்து விஷயாலோசனை கமிட்டி நடைபெற்றது. விஷயாலோசனைக் கமிட்டி பந்தலில் நடந்துகொண்டிருக்கும்போது பந்தலுக்கு வெளியில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. ஸ்ரீலஸ்ரீ அவினாசி புது நந்தவனம் கருணாலயஸ்வாமி கூட்டத்தில் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கர், ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சார் ஆகிய இரு தலைவர்களும் தீண்டாமை மதுவிலக்கு என்ற விஷயத்தைப்பற்றி முறையே உபந்நியாசம் செய்தார்கள். பிரசங்கம் முடிந்ததும் கூட்டம் இரவு 8 மணிக்குக் கலைந்தது.

இத்துடன் முதல் நாள் நடவடிக்கை முடிவுற்றது.

இரண்டாவது நாள் நடவடிக்கைகள் அடுத்தவாரம் வெளி வரும். அதில் தீர்மானங்களும் தீர்மானங்களில் தலைவர்கள் சொல்லிய அபிப்பிராயங்களும் ஸ்ரீமான்கள் C. ராஜகோபாலாச்சாரியார், ஈ. வே. ராமஸ்வாமி நாயக்கரவர்கள், அக்கிராசனர் முதலிய தலைவர்கள் நிகழ்த்திய முடிவுரை பிரசங்கம் காரியதரிசியின் அறிக்கை முதலியன வெளிப்படும். ப—ர்.

## எலெக்ஷன் சூழ்ச்சி.

இப்போது சென்னை மாகாண சட்டசபைகளிலும் பத்திரிகைகளிலும் கள்ளின் வாசம் அதிகமாய் வீசுகிறது. சோழியன் குடுமி, சும்மா ஆடாதென்பார்கள். அது போல இதுவும் ஏதாவது ஒருகுறிக்கொண்டுதான் வீசுகிறது. சட்டசபையில் வீசுவதற்கு சுயராஜ்யக்கட்சியும்; பத்திரிக்கையில் வீசுவதற்கு ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரும் பிரதான புருஷர்களாவார்கள். மதுபானத்தை யொழிப்பது ஒத்துழையாக் காங்கிரசுக்காரர்கள கடமை. தீண்டாமை விலக்கு, மது விலக்கு இவைகள் ஒத்துழையாமையின் பகிஷ்கார திட்டத்தின் அங்கமாகும். இதைக் காந்தியடிகளே கடந்த 4-5 வருஷங்களாய் ஒழிக்க அரும்பாடுபட்டார். அதையே அடிப்படையாகக்கொண்டு சில தொண்டர்கள் சிறைக்கும் போனார்கள் தமிழ் நாட்டிலும் ஸ்ரீமான். ராஜகோபாலாச்சார் கள்ளுக்கடையை ஒழிப்பதற்கும், குடியையே தொலைத்து விடுவதற்கும் அரிய பிரயத்தினம் செய்து வந்திருக்கிறார். அவர் ஆணைப்படியும் 2–3 வருஷங்களுக்கு முன் மறியல் செய்த தொண்டர்கள் சிலர் சிறைக்குப்போயும் முடியாமல் நிறுத்திவிட்டார். இப்போது சட்டசபை மூலமாய் அதை ஒழித்துப் போடப் பகீரதப் பிரயத்தினம் செய்துகொண்டு வருகிறார். ஆனால் அவர் மதுபானத்தை ஒழித்து விடுவதாகச் சொல்லும் காங்கிரசுக்காரர்களுக்கு ஓட் கொடுக்கும்படி வாக்காளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறார். அப்படியானால் மிதவாதம் சுயேச்சை ஜஸ்டிஸ்முதலிய மற்றக்கக்ஷிக்காரர்கள் கள்ளுக்கடையைவிரும்புவதாக ஏற்படுகிறது. இவர்கள்யாவரும் கள்ளைவிரும்புவது கிடையாது. எல்லோரும் அதுதொலைந்தேபோகவேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். ஆனால் தொலைப்பதில் தான் வித்யாசம். சுயராஜ்யக்கக்ஷியார் இன்றே ஒழித்து விடுவோம் என்கிறார்கள். எப்படி ஒழிப்பது? இவர்கள் ஒரு தீர்மானம் செய்யலாம்; அதினால் ஒழியுமா? உடனே சர்க்காரார் பணத்தட்டு முதலிய காரணத்தை சொல்லி தீர்மானத்தை ஒழித்துவிடுகிறார்கள். மதுபானத்தின் வரும்படியை ஈடு செய்ய இன்னொரு வரியைப்போட்டால், இப்போதுவரியதிகம் என்று சொல்பவர்கள் கூச்சல் போடுவார்கள். செலவினத்தைக் குறைக்கவேண்டும் பெரிய உத்தியோகஸ்தர்கள், ராணுவங்கள் இதுகளில் கைவைக்க முடியாது; வந்தும் போயும் கிராமக்கணக்குப்பிள்ளை மணியகாரர் போன்றவர்கள் தலையில் தான் கைவைக்கவேண்டும்; அல்லது சுவல்ப சம்பளம் பெறும் இந்திய உத்தியோகஸ்தர்கள் தலையில் விடியும். இதையெல்லாம் யோசித்தே இதை சிறுகச் சிறுக அதாவது சில வருஷத்திற்குள் அடியோடு நிறுத்திவிடலாம் என்பதாகச் சொல்கிறார்கள். அதற்குள்ளாவது அறவே ஒழிப்பதற்குப் பார்ப்பது தான் உண்மையில் சர்க்கார் மூலம் குடியை ஒழிப்பவர்கள் என்று கருதப்பட வேண்டுமே யொழிய,இன்றைக்கே ஒழிப்போமென்பது சட்டசபை மூலம் நடவாத விஷயம். இது ஒரே வருஷத்தில் சுயராஜ்யம் வாங்கிக்கொடுப்போம் என்பது போலத்தானிருக்கும். மகாத்மா காந்தியடிகள் ஒரே வருஷத்தில் சுயராஜ்யம் என்றார், அவர் ஆக்ஞைப்படி சிஷ்யர்கள் நடந்திருந்தால் ஆறு மாதத்தில் சுயராஜ்யம் கிடைத்திருக்கும், ஆகையால் முதலாவது ஜனங்களை நல்வழியில் திருப்பவேண்டும். அவர்களை க்குடிக்காமல் நிறுத்தவேண்டும்; மரங்களை கண்ணுக்கட்டுக்குக் கொடுக்காமல் நிறுத்தவேண்டும்; குத்தகைக்குக் கடைகளை எடுக்காமல் செய்யவேண்டும்; அந்தந்த சமுகத்தலைவர்கள் தங்கள் ஜாதியில் கட்டுப்பாடு செய்யவேண்டும்; அதை விட்டுவிட்டு பொறுப்பில்லாத சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றுவது ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது. உதாரணமாக, நமது மாகாணத்தில் கோயமுத்தூரும், சேலமும் பெரும்பாலும் கொங்கு வேளாளரைக்கொண்டது. அவர்களுக்குள் பெரிய மகா நாடுகள் கூட்டி மதுவை ஒழிக்கவும், குடியை நிறுத்தவும் தீர்மானங்கள் செய்துகொண்டு தான் வருகிறார்கள். ஆனால் ஒவ்வொரு வருஷமும் குடி யதிகரித்துக்கொண்டே வருகிறது. ஏனெனில் மரம் கள்ளுக்கு விடுகிறவர்களும், கடையெடுப்பவர்களும், குடிப்பவர்களும் பெரும்பாலோராயிருப்பதோடு சட்டசபை மெம்பர்களும் அதில் பணம் சம்பாதிப்பதால், தீர்மானம் காகிதத்திலேயே இருக்கிறது மதுரை. ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் நடக்கும் நாடார் மகா நாடுகளும் இருந்துவருகிறது.

ஆசையால் முதலில் ஜனங்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பது தான் சரியான வழி. முதலாவது சுயராஜ்யக் கக்ஷிக்காரர் மதுவிலக்கை ஒழிப்போம், எங்களை தேர்ந்தெடுத்தனுப்புங்கள் என்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர், மரங்களை குத்தகைக்கு விட்டிருப்பவர்கள். இவர்கள் குத்தகைக்கு பார்க்கிறவனிடம் மரத்தை கள்ளுக்குக் கொடுக்கவேண்டாம்; என்று சொல்லி தானியம் விளைவிக்கிறதற்குமட்டும் குத்தகை வாங்கி வருவதாயிருந்தால் குத்தகைதாரன் மரத்தைக் கள்ளுக்கு ஏன் கொடுக்கிறான்? இவர்கள் குத்தகைப் பேசும்போதே தானியம் விளையும் பூமிக்கு 500—தென்னைமரம் 500-க்கு சராசரி கள்ளுக்குத்தகை ரூ. 1000 ஆகும், மொத்தம் ஆயிரத்துக்கு ஒரு கொடுப்பது உனக்கு பெரிதா? என்று உபதேசம் செய்து எழுதி வாங்கிக்கொண்டு, குடியை ஒழிக்கத்தீர்மானம் கொண்டு வந்தால் யார் நம்பப் போகிறார்கள்? தவிர, சுயராஜ்யக் கக்ஷிக்காரர்கள் எல்லாரும் குடிக்காமலா இருக்கிறார்கள்? அவன் கிடக்கிறான் குடிகாரன்; எனக்கு ஒரு சொப்பு என்றது போல், கேட்கிறவர்களில்லையா? இவர்களும் குடியை ஒழிப்பவர்கள்தானே! மெம்பர் நம்பி முதல திருவலத்தவரை அந்தக்குடிப்பேய் ஆழ்ந்திருக்கிறது; ஆனால் அந்தஸ்தைப் பொறுத்து மரியாதை கொடுக்கப்படுகிறது. கள்ளுக்குடிக்கிறவன், ஜனசமூகத்தில் குடிகாரன் என்றழைக்கப்படுகிறான். அவன் யாருக்கும் தெரியாமல் குடிக்கிறான். ஆனால் மேனாட்டு [illegible] மேஜையின்மேல் மனைவி புத்திரர்களுடன், சிநேகிதர்களையும் கூட்டிக்கொண்டு குடிப்பது நாகரீக சாப்பாடென்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் குடியை வெறுக்கிறவர்கள் யார்? ஓட்டர்கள் எப்படி இவர்களை நம்பிக் குடியை ஒழிக்குங் கக்ஷியென்று ஓட்டுக்கொடுப்பார்கள்! இந்த நிலையில் குடியை ஒழிக்கும் ஒரு கக்ஷிக்கு எப்படி ஓட்டு கிடைக்கும்? அப்படி கிடைத்தாலும் எப்படி மெஜாரிட்டியாய் வரமுடியும்? வந்தாலும் உடனே கள்ளுக்கடையை ஒழிப்பது சாத்தியமா? ஆயிரக்கணக்கான பேர் கொண்ட ஒரு பெரிய ராஜிய மஹாநாடான காங்கிரசில் குடியை ஒழிக்கத்தீர்மானித்து அதற்காக 30 ஆயிரம் பேர் ஜெயிலுக்குப் போயும் குடியை ஒழிக்கச்சம்மதிக்காத சர்க்கார், பொது ஜனங்களை ஏமாற்றி சுயநன்மைக்காகச் சட்டசபைக்குப் போகவிருக்கும் சிலரின் உதட்டுத் தீர்மானத்திற்கு ஏமாறித் தீர்மானத்திற்கு பயந்து கள்ளுக்கடைகளை மூடிவிடுவார்களா? ஆதலால் காங்கிரசின் பேராலும் சுயராஜ்யக்கட்சியின் பேராலும் செய்யப்படும் கள்ளுக்குடி விலக்கு ஓட்டுப் பிரசாரமெல்லாம் பொது ஜனங்களை ஏமாற்றி, ஓட்டுவாங்கி, மந்திரி பதவியும் உத்தியோகங்களும் பெற ஒரு தந்திரமே அல்லாமல், உண்மையில் இவர்களால் குடியை ஒழிக்க முடியாதென்பதோடு, இவர்களுக்கும், உண்மையாய்க் குடியை நிறுத்தவேண்டுமென்கிற எண்ணமும் இல்லை. இருந்தால் சட்டசபையை நாடமாட்டார்கள், இந்த சட்டசபைத்தேர்தல் சத்தம் அடங்கிவிட்டால், கள்ளை நிறுத்தும் பேச்சும், சம்பாஷணைகளும் ஸ்ரீமான் ஆச்சாரியாரின் கோடு கட்டிய குரலும் அடங்கிப்போகும் என்பது உறுதி. உண்மையாய் குடியை நிறுத்தும் எண்ணங்கொண்ட மகான் ஒருவர் வெளியில் வந்தால், ஜனங்களும் தெய்வமாகக்கொண்டாடுவார்கள்; பதினாயிரக்கணக்காய் ஜெயிலுக்கு போகவும், உயிர் விடவும் தயாராயிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்படி வரப்பட்ட காலத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அக்காலம் எது? அதுதான் சுயராஜ்ய காங்கிரசுக்கு முந்தின காலம். இந்தக் காலமோ எலக்ஷன் சூழ்ச்சிக்காலம்.

திருப்பதி.

---

## கிராமப்பாடசாலையில் தீண்டாதார்.

(ஸ்ரீமான் ஜி. பாலசாமி நாயுடு எழுதுகிறார்.)

### ஓர் சம்பாஷணை.

நான் ஒரு சமயம் ஒரு ஊருக்குச் சென்ற பொழுது அவ்வூர் பாடசாலைக்குச் சென்றேன், அவ்வூர் பாடசாலையில் இச்சம்பாஷணையைக் கேட்டேன். ஒரு ஐயர் அந்தப் பாடசாலைக்கு வந்தார்.

ஐ. உபாத்தியாயரைப் பார்த்து சார், இப்பிள்ளைகள் எல்லாம் யார்? புதிதாகத்தோன்றுகிறதே.

உ. இவர்கள் ஆதித்திராவிடர்கள்.

ஐ. ஆதித்திராவிடர் என்றால் பஞ்சமரா?

உ. ஆம். அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

ஐ. என்ன ஜாதிக்காரர்கள் இவர்கள்?

உ. இவன் பறையன், இவன் பள்ளன், இவன் சக்கிலியன்

ஐ. திகிலடைந்து, இது என்ன அநியாயம்! உயர்ந்த வகுப்பு இந்துக்களோடும் பிராம்மணர்களோடும் உட்காரும்படி இப்பிள்ளைகளையும் உட்காரவைத்துவிட்டீர்களே. அதிலும் பிராமண ப்பிள்ளைகள் ஓரத்திலா? இதென்ன அக்கிரமம்? இப்படிச் செய்தால் மழை பெய்யுமா?

உ. உட்கார்ந்தாலென்ன? குடி முழுகிப் போனது போல் பேசி பிரசவவேதனைப்படுகிறீர்களே. இதினால் மழைபெய்வதில்லையா? பார்ப்பனர் குடிப்பதினாலும், மாம்சம் சாப்பிடுவதினாலும், லஞ்சம் வாங்குவதினாலும், வக்கீல் போலீசு முதலிய உத்தியோகம் பார்ப்பதினாலும் மழை பெய்வதில்லையா?

ஐ. ஐயோ! அநாசாரம் பிடித்த ஜாதிககாரர்களாச்சே. அவர்கள் அருகிலிருந்தால் கண் கெட்டுவிடுமே! மற்ற உருப்படிகளும் கெட்டு பாபத்துக்கல்லவோ ஆளாகவேண்டும்.

உ. என்ன, அவர்களா ஆசாரமற்றவர்கள். உங்கள் கூட்டத்தார்களையும், மற்ற உயர்ந்த ஜாதியென்பவரையும் பற்றி வெளியில் சொன்னால் வெட்கக்கேடு. கோவில் பூனை, தேவருக்கு அஞ்சாது என்பதுபோல், எத்தனை பேர் தெய்வ சின்னங்களை அணிந்து பரத்தையர் வீட்டில், பிராமண வக்கீல்கள், டாக்டர்கள் இவர்கள் வாழ்க்கை எப்படி? பிரமோஷன் எப்படி? இன்னும் சொல்லட்டுமா?

ஐ. போதும், போதும், கதைகளை கிளப்பாதீர்கள்.

உ. இதோ இப்பிள்ளைகளைப் பாருங்கள், அவர்களின் பெற்றோர் பூமிக்குப்பாடுபட்டு அறவழியில் பொருளீட்டித் தங்கள் வாழ்க்கையை, சிக்கனமாகவும், பரிசுத்தமாகவும் கழிக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்படுவதாற்றானே உங்கள் கூட்டத்தாரும், மற்றவர்களும் சோறு உண்டு வாழவேண்டி இருக்கிறது. எல்லோருக்கும் உழைத்து அளமிடும் இவர்களையா தாழ்ந்தவர்களென்று சொல்வது?

ஐ. அவர்களைத் தொடுவதில் பாவமில்லையா? பிராமணனை மற்றவனோடு சமமாக்குகிறீர்களே. தெரியாமலா பெரியோர்கள் பிராம்மணனுக்குத் தொன்றுதொட்டு உயர்வு கொடுத்து வந்திருக்கிறார்கள்.

உ. ஏன் ஐயா பாவம் பாவம் என்று பயந்து சாகிறீர்? திருடுவது பாவம்; பொய் சொல்லுவது பாவம்; கொலை செய்வது பாவம். தீண்டுவது பாவம் என்று எந்த உண்மை நூல் கூறுகிறது? இம்மட்டுமா, கெருங்காமை, காணுமை போன்ற அநியாயங்களையும், செய்து வருகிறீர்களே. தாழ்ந்தோர் வீட்டு எச்சிலை தின்ற நாய்கள் உங்கள் வீட்டோரங்களில் உலவவில்லையா? அவர்கள் சமையல் அறைகளில் தின்று திரியும் எலிகளும், பெருச்சாளிகளும் உங்கள் சமையலறைகளில் நுழைந்து பண்டங்களைத் தின்பதில்லையா? நீங்களும் நாய்களையும் பூனைகளையும் பிறவிலங்குகளையுந் தொடுகின்றீர்களன்றோ? பிறப்பில் வேற்றுமையில்லாத மனிதனைத் தொடல் ஏன் பாவம் என்கிறீர்கள்? உங்கள் முன்னோர்களில் சிலர் தகப்பன், பிள்ளை பிழைக்க வேண்டுமென்று திரவியம் தேடி வைத்துச் செல்லுதல் போல, தங்கள் கூட்டத்தார், அதாவது தம் வமிசத்தில், வருவோர் உயர்ந்திருக்க வேண்டுமென்றும் பிறர் அவர்கள் சொற்கேட்டு நடக்கவும், ஜீவியம் கேடுறுவண்ணமும், சில மாமூல்களை ஏற்படுத்தினர். உங்கள் பொய் போதனைகளைக்கேட்டு மற்ற உயர்ந்த ஜாதியாரென்போரும் ஐயர், சொன்னது சரி, சுவாமிகள் சொன்னது சரியென்றும் உங்களில் இழிந்தவராயினும் கடவுளென்றும், தேவரென்றும் நம்பும்படி செய்து ஜாதி இருமாப்படைந்து மற்றவர்களைச் சூத்திரரென்று ஒதுக்கி வருகின்றீர்கள்.

ஐயர். இவர்கள் கீழான பிறவிதானே!

உ. பிறப்பில் கீழ் மேல் ஏது? பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார் பெரியோர். ஐயா கள்ளுண்பவன், ஈன்ற பிராமணன் மகன் பிராமணனாவானோ? பிராமணத் தன்மை இருந்தாலன்றோ யாரும் பிராமணராவார். எவ்வுயிரிடத்தும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோரன்றோ அந்தணர். இப்படி இருக்க பேராசையால் பொருளை உறிஞ்சிப்பிழைக்கும் வன்கணர் எப்படி அந்தணராவர்?

ஐயர். இம்மாதிரி விஷயம் யாவரும் அறிந்தால் எங்கள் பிழைப்பு என்ன ஆகுமோ?

உ. பயப்பட வேண்டியதில்லை. மனிதர்கள்

ஒருவரை ஒருவர் தாழ்ந்தவர் என்று மதிப்பதை விட்டுவிடவேண்டும். அப்பொழுது நமக்குள் சமத்துவம் உண்டாகும்; இதனால் யாவரும் உண்டு களித்து இன்புறலாம்.

---



## உண்மையான கதர்.
## கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

S. ராமநாதன்
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:— ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்ட்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரக வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்தகத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

S. ராமநாதன்
காரியதரிசிகத்தர், இலாகா.

## தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ. 2—8—0 |
| வெளிநாட்டிற்கு | ரூ. 3—0—0 |
| சாதாரண பதிப்பு | ரூ. 2—0—0 |

விலாசம்:—
அமைச்சர்
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

என்றுமறியாத இணையில்லா கீர்த்தி.

எங்கள்
## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கைகால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45 வருஷகாலமாக என்றுமறியா இணையில்லா கீர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துக்கொண்டிருக்கும் நற்சாக்ஷிப்பத்திரங்களே போதுமான சான்றாகும். இன்றைக்கே உபயோகித்து குணத்தையறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பத்ரிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி, ரங்கூன்.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## சேலம் பனியன்கள்

எங்களிடம் பலமாதிரியான பனியன்கள் தயார் செய்யப்படுகிறது. வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் இதர விஷயங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விக்டோரியா நிட்டிங் பாக்டேரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு.

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்தசார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ் நாடு கதர் போர்டின் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அநுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்
கத்தர் ஸ்டோர்
அமராவதிபாளையம்
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு
திருப்பூர் மார்க்கம்.

## 100-வது காலண்டர் இனாம்.

1004 உபதேசம் ரூ. 2-0-0, சச்சிதானந்த சிவம் ரூ. 1-2-0, மோடிசாதனம் ரூ. 4-0-0, ஜாதக அலங்காரஉரை ரூ. 2-0-0, ஞானக்கோர்வை ரூ. 1-8-0, பட்டினத்தார் உரை ரூ. 2-0-0, கந்தரநுபூதி ரூ. 0-8-0, சஷ்டிஉரை ரூ. 0-8-0, கந்தர் அந்தாதிஉரை ரூ. 0-12-0, திருமுருகாற்றுப்படை உரை ரூ. 0-12-0.

ஸ்ரீசாதுரத்ன சற்குருபுத்தகசாலை,
பார்க்டவுன், (கு) சென்னை.

முக்கிய கவனிப்பு.
## 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடிஅரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 வருஷத்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம்காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0

நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0

நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 ஜெப்புகள் செறுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.